என் சகோதரியின் ஜாதகத்தை காண்பித்தோம்

ஜாதகத்தை பார்த்து,

திருமண தேதி சரியில்லை, ஜாதகத்தில் நாகதோஷம் மிக வலிமையாக உள்ளது.

**நாகம் ஜாதககட்டத்தையே சுற்றி வருவது போல் படம் வரைந்து காண்பித்து.**

இன்றைய தினத்தில் இவர் விதவையாகி இருக்க வேண்டும் கணவர் விபத்தில் இறந்து போய் இருப்பார் என்று கூறி திகைக்க வைத்தார்!

உண்மை!

1997ல் என் சகோதரியின் கணவர் "விமான விபத்தில் இறந்து போனார்".

மிக சிறிய வயதாக இருப்பதால் இதற்கான ஒரு சிறிய பரிகாரத்தை செய்து விட்டால் இவருக்கு 2ம் திருமணம் நடக்கம் என்று கூறினார்.

பொதுவாக ...

எங்களுடைய பிரமண சமூகத்தில் விதவை திருமணம் என்பது எளிதில் நடக்க கூடயது அல்ல

சட்டென்று 2ம் திருமணத்தை பற்றி நினைக்க தோன்றாததால் .... பரிகாரம் செய்ய தோன்றவில்லை விட்டுவிட்டோம்! எங்கள் குடும்பத்திலும் பரிகாரம் மீதுநம்பிக்கை இல்லை! விதிப்படி தானே நடக்கும் – என்று சும்மா இருந்துவிட்டோம்!

2002ம் வருடம் – என் தாயாருக்கு உடல் நலம் சரியில்லாமல் இருந்தது. ஜாதகம் காண்பித்தோம்.

19.12.2002 அன்று உங்கள் தாயாரின் கடைசி மூச்சு நின்று போகும் என்று பட்டென்று கூறினார்.

என்னை தவிர – வீட்டின் யாருமே இந்த பலனை நம்பவில்லை ஹரி சார் சொன்ன மாதிரியே!

19.12.2002 அன்று என் தாயார் இறந்துவிட்டார் ஓட்டு மொத்த குடும்பமும் அதிர்ந்தது.

அப்பொழுது தான் ஹரி சார் மேல் என் குடும்த்தாருக்கு நம்பிக்கையே வந்தது.

இந்த சம்பவத்திற்கு பின் –

என் சகோதரியின் நாகதோஷத்தை போக்க என் தந்தையாரே நேரில் சென்று ஹரி சாலை பார்த்து பரிகாரத்திற்கு ஏற்பாடு செய்தார். (21.04.2003ல்)

பரிகாரம் செய்து விட்டு – வரும் ஆகஸ்ட் மாதம் திருமணம் நடக்கும் என்று கூறினார்.

ஆச்சரியம் படும்படி – எதிர்பாராதபடி மிக நல்ல வரன் அமைந்து24.08.2003ல் என் சகோதரிக்கு 2ம் திருமணம் நடந்தது.

எப்படிங்க இதெல்லாம்!?

– விஷ்வா

## ஒரு டாக்டரின் – அதிர்ச்சி!

### 2001ம் வருடம்?

என் சகோரரயின் ஜாதகத்தை காண்பித்தோம்.

ஜாதகத்தை பார்த்து.

இவருக்கு நரம்பு சம்பந்தமாக சில பாதிப்புகள் உடலில் ஏற்படு துவங்கியுள்ளது.

நம்பிக்கை இருக்கம் பட்சத்தில் ஒரு சில பரிகாரங்கள் செய்து கொண்டால் ...

மிக பெரிய ஆபத்திலிருந்து தப்பி விடலாம் என்று கூறினார்.



மிக பெரிய ஆபத்து என்றால்?... கேட்டோம்.

நடக்க முடியாமல் போகும் சூழல் உருவாகும் வீல் சேர் தேவைபடும் அளவிற்கு ... என்று கூறி அதிர்ச்சி கொடுத்தார்!

ஏன் தான் ஜாதகம் பார்க்க வந்தோமோ? என்று கூட சில வினாடிகள் தோன்றியது.

என் சகோதரி – ஒரு டாக்டர் அப்பல்லோ ஆஸ்பத்திரியின் பணிபுரிகிறார். விவரத்தை சொன்னோம்.

ஒரு டாக்டர் என்ற முறையில் – நிறைய டெஸ்ட் அறிகுகள் எல்லாம் வைத்து முடிவு செய்ய வேண்டியதை.

ஜோதிடத்தை வைத்து முன்கூடியே சொல்வது... என்பது நம்பமுடியாத விஷயம். என்று ... கூறி இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டுவிட்டார்.

நாட்கள் நகர துவங்கியது.

ஹரி சார் சொன்ன மாதிரியே – உடலில் நரம்பு சம்பந்தமாக அறிகுறிகள் தென்பட துவங்கியது.

ஒரு கட்டத்தில் நடக்கவே முடியாமல் போய்விட்டது. அதிர்ச்சி அடைந்தோம்!

காரில் இருந்து இறங்கி, வீல் சேரில் உட்கார வைத்து ... வீட்டிற்குள் வருவதும் ... கொடுமையான விஷயமாகியது.

உடனே

ஹரி சாலை சந்தித்து பரிகாரங்கள் செய்தோம். அவர் குறிப்பிட்ட படியே – குறிப்பிட்டு கொடுத்த காலகட்டத்தில்

பூரண குணமடைந்து, நார்மலாக நடக்க ஆரம்பித்தார்.

உதவிகள் செய்த ஆவிகளுக்கு நன்றி தெரிவத்து கொள் கிறோம்.

# சொந்த வீடு

வீடுவாங்க கூடிய அளவு பணவசதி இல்லாத சூழலில் மார்ச் 1990ல் 30-9-1991க்குள் சொந்த வீடு வாங்குவீர்கள் என்று கூறி அருள்வாக்கு கூறினார். அதன்படியே சூழ்நிலைகள் மாறியது.

வலிய ஒருவர் வந்து, தன் வீட்டை வாங்கி கொள்ளும்படி கூறி கடன் உதவிகள் - மற்றும் இதர உதவிகள் செய்தார். உறவினர்களும், பணஉதவிக்கும் ஏற்பாடு செய்ய 30-09-1991 க்குள் சொந்த வீடு அமைந்தது.

**D. Durai Raj, 5/215, Radha Nagar, Karambakkam, Porur, Chennai - 114.**



# வசதியான வாழ்க்கை

1989ல் பற்றாக்குறையில் வாழ்க்கை நடத்திய நான் ஆர்.பி. ஹரி அவர்களின் வாக்கை பின்பற்றியதால் - அவர் கூறியபடியே 1991ல் சொந்த ப்ளாட் வாங்கி, வசதியான சூழலுக்கு உயர்ந்தேன் - இப்படி வாழ்வேன் என்று நினைத்துக் கூட பார்க்கவில்லை.

**N. Ravichandran, 30, Srinivasa Iyengar Street. West Mambalam, Chennai - 33.**

# திருமணம் மூலம் – அதிர்ஷ்டம் வேண்டுமா?

திரு. ஹரு (இந்த சம்பவத்திற்கு தொடர்பு உடையவரின் பெயரும் ஹரி என்பதே) மிக சாதாரண நிலையில் வாடகை வீட்டில் குடியிருந்தவர் படிப்பும் 10ம் வகுப்பு வரையே – இவர் தன் வாழ்க்கை மிக உயர்ந்த நிலைக்கு உயர, ஆர்.பி.ஹரி அவர்களின் பரிகார முறையை தொடர்ந்து கடைபிடித்து வந்தார்.

சூழ்நிலைகள் வேகமாக மாறியது. திருவல்லிக்கேணியில் உள்ள கோடீஸ்வரர் ரமணய்யா நாயுடு அவர்களின் (அரிசி வியாபாரி) மகளின் அதிர்ஷ்ட பார்வை இவர் மீது திரும்ப கடின எதிர்ப்பே இல்லாமல் – காதல் திருமணம் நடந்தது.

**திரு. ஹரி 61, செங்கல்வராய தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை – 5.**

# ஹிப்னாடிசம் – ஓர் மருத்துவமா?

திருமதி. சாவித்ரி அவர்களுக்கு 1988ல் முதுகில் மேஜர் ஆப்பிரேஷன் நடந்தது. அதன் விளைவு? இடது கை சரியாக இயங்காமல் ... செயல் இழந்தது போல் ஆனது. நரம்பியல் நிபுணர்களையும், எலும்பு முறிவு ஸ்பெஷலிஸ்டுகளையும் பார்த்தாச்சு, ஷாக் ட்ரீட்மெண்டும் கொடுத்துப் பார்த்தனர். ஒன்றும் சரிபட்டுவரவில்லை.





கடைசியாக, திரு. ஹரி அவர்களின் ஹிப்னாடிக் சிகிச்சையினால் முதல் ட்ரீட்மெண்டல் பூரண குணம் அடைந்தார்.

**சி.எச். சாவித்ரி ஷண்முகம்,**
**எண்.11, பாரதீஸ்வரன் காலனி, அழகிரிபுரம்,**
**பவர் அவுஸ், கோடம்பாக்கம், சென்னை – 24.**

# எதிர்காலத்தை மாற்றும் ரகஸ்ய சாஸ்திரங்கள்



ஒரு காட்டில் – குடில் அமைத்து,

ஒரு முனிவர், தன் சிஷ்யர்களுடன் இறைபணி செய்து கொண்டிருந்தார்.

தினமும் காலை வேளையில் முனிவர் தியானம் செய்யும் பொழுது ... பூனை ஒன்று முனிவர் மடி மீது அமர்ந்தும், அவர் தலை மீது ஏறியும், இடைஞ்சல் செய்து கொண்டிருக்கவே!

தன் சிஷ்யன் ஒருவனை கூப்பிட்டு அப்பூனையை எதிரே உள்ள மரத்தில் கட்டி வைக்கும்படி உத்தரவிட்டார்.

அன்று முதல் –

முனிவர் தியானம் செய்ய உட்காரும் பொழுது, – சிஷ்யர்கள் அப்பூனையை முனிவரின் எதிரே உள்ள மரத்தில் கட்டி வைக்கலானார்கள்.

நாட்கள் கடந்தன!

முனிவரும் ஜீவ சமாதி ஆனார்.

சிஷ்யன் ஒருவன் – முனிவரின் பொறுப்பை மேற்கொள்ள துவங்கினான்.

வழக்கம் போலவே!

முனிவரின் பதவிக்கு வந்த சிஷ்யன், தியானம் மேற்கொள்ள அமரும் பொழுது

பூனையை மரத்திலே கட்டும் பழக்கம் ஸ்திரமாகியது. நீடித்தது. நாட்கள் நகர்ந்தன.

பூனை ... திடீர் என்று இறந்து போனது.

சிஷ்யன் கூறினான் – நாளை முதல் தியானம் செய்யும் நேரத்தில், – மரத்தில் கட்டிவைக்க வேறு பூனையை கொண்டுவாருங்கள் என்று உத்திரவிட்டான். இப்படி தான் –

நம் முன்னோர்கள் கடைபிடித்த சில விஷயங்களை மூல காரணமும், அர்த்தமும் தெரியாமல் ... வழக்கம் போல் கடைபிடித்து.

சடங்கு, சம்பிரதாயமாக்கி, – மூடநம்பிக்கை என்று சொல்லும் அளவிற்கு ஆக்கிவிட்டோம்.

## <u>அடுத்த வீட்டில்</u>

ஒரு குழந்தைக்கு காய்ச்சல் அதிகமாகியது. ஞாயிற்றகிழமை, இரவு சுமார் 9.00 மணி ... டாக்டர் கிளினிக்கில் இருக்க மாட்டார்.

என்ன செய்வது என்று தெரியாமல் குழந்தையின் பெற்றோர்கள் குழம்பினார்கள்.

கேரளாவில் – மிக ஒதுக்குபுறமான கிராமம் அது.

பொழுது விடிந்தால் தான்!

எதுவுமே செய்ய முடியும் என்ற நிலையில்!


அடுத்த வீட்டிலிருந்த ஒரு வயதான பெண்மணி உப்பு, மிளகு போன்றவற்றுடன் சில நாட்டு மருந்து சரக்குகளை கைபிடி அளவு எடுத்து வந்து.

பயப்படாதேம்மா ... இதெல்லாம் சாதாரண காய்ச்சல் தான் என்று சொல்லிவிட்டு,

தன் கையில் உள்ள நாட்டு சரக்கு மருந்துகளை குழந்தைக்கு அருகே கொண்டு வந்து, ஒன்பது முறை இடம் வலமாக சுற்றினார்.

பிறகு,

அம்மருந்துகளை அருகே இருந்த அடுப்பில், எரியும் தீயில் கொட்டி விட்டு,



கைகளை கழுவி கொண்டார்.

என்ன ஆச்சரியம்!

சில நிமிடங்களில் ... காய்ச்யல் வேகமாக குறைந்து நார்மலானது. எல்லோரும் நிம்மதி பெருமூச்சுடன் படுக்க சென்று விட்டோம. என் மனம் மட்டும் ... தூங்கவில்லை.

இந்த செயலின் உட்பொருள், ரகஸ்யம் என்ன?

இதே போன்ற ஒரு செயலை பற்றி என் தாத்தா என்னிடம் விளக்கி உள்ளார்.

அவருக்கு ... மாந்திரிகம், யோகம், சித்து விளையாடுவது அத்துபடி.

அவர் சொன்னார்...

நாம் குடலை தினசரி சுத்தபடுத்தும் பொழுது ... கழிவு பாத்திரத்தில் எச்சியை துப்பினால் ... எச்சிலும் மலமும் ஒன்று சேர்ந்ததும் மலத்திலிருந்து ஒரு தீய கதிர் வீச்சு, புறப்பட்டு நேராக ... எச்சில் வந்த பாதையில் பாய்ந்து, நம் தொண்டையை தாக்கும்.

உடனே! தொண்டையில் கபகட்டு, இருமல், சளி தொந்தரவு யாவும் ஏற்பட்டு, தொண்டையை ரணபடுத்தும்!

இந்த கபகட்டை – மருந்து மாத்திரைகளால் லேசில் குணப்படுத்த முடியாது.

ஆனால் – நேராக ... எரியும் அடுப்பிற்கு சென்று, நெருப்பில் எச்சிலை உமிழ்ந்தால் ...

நெருப்பிலிருந்து ஒரு கதிர்வீச்சு, புறப்பட்டு தொண்டையை தாக்கி,ங

கபகட்டை குணபடுத்திவிடும் என்ற செய்தியை ... என் தாத்தா கூறியதில் உட்பொருள் உண்டு என்று புரிந்தது.

அப்படியானால் –



தீயை வளர்த்து, யாகம் செய்வதிலும் ஏதோ ஒரு விஷயம் இருக்க வேண்டும் இல்லையா?

பூசணிக்காயில் கற்பூர் ஏற்றி. சுற்றி போடுவதிலும் சில விஷயங்கள் உண்டு என்றே நம்பலாம்.

ஆனால் –

சுற்றி போடுபவர்களுக்கு எந்த அடிப்படை விவரங்களும் தெரியாமல் வழி வழியாக செய்யப்பட்ட விஷயத்தின் அடிப்படையில் – அதை செய்கிறார்கள். ஆகையால் பலர் இந்த வழக்கத்தை மூட நம்பிக்கை என்று சொல்லி கிண்டலடிக்கிறார்கள்.

கேள்விகள் ஆயிரம் கேட்டு – சந்தோஷப்படுகிறார்கள்.

தற்சமயம்!

ரெய்கி ... என்ற புதிய முறை அறிமுகப்படுத்துப்பட்டு வருகிறது. வெளிநாடுகளில் இது மிக பிரபலம்.

கைகளால் தொட்டு, தடவி .... நோய்களை குணப்படுத்தும் முறை!

இது வேறு ஒன்றும் இல்லை ...!

நம்முடைய தாத்தா பாட்டி காலத்தில் செய்து வந்த "சுற்றி போடுதல்" முறை தான்.

இந்த செய்தி ...?! (நாமெல்லாம் கிண்டல் அடித்த விஷயம்)

புதிய மொந்தையில் – பழையகள்ளு!

நமது உடலில் ... இருந்து, – சில இஞ்சு தூரம் வரை கண்களுக்கு தெரியாத அளவிற்கு ஒரு ஒளிகதிர் வீச்சு உண்டு அதை ... ஆரா என்று அழைப்பார்கள்.

தொலைக்காட்சி பெட்டியின் அருகே ஸ்கீரினை ஒட்டியது போல் முழங்கையை மட்டும் படாமல் ஸ்கீரினை தொடாமல் கைகளை வைத்து

கொண்டு,



தொலைக்காட்சி பெட்டியின் ஒளிபரப்பை சட்டென்று நிறுத்தினால்!?

நம் உடலில் ஒரு விதமான மாற்றம் ... சிலிர்ப்பு ... மயிர் கால்கள் எழுந்து இருப்பது போல் ஒரு உணர்வு ஏற்படும்.

இதன் மூலம் – நம் உடலில் உள்ள **(AURA)** ஆராவை உணரமுடியும்.

ஒரு மனிதன் பல மணி நேரம் ஒரே இடத்தில் அமர்ந்து விட்டு பிறகு எழுந்து சென்றுவிட்டால் ...

சில வினாடிகள் – அவன் இருந்த இடத்தில் அவனுடைய உடலின் பிரதி பிம்பம் போல் ... அம்மனிதனுடைய ஆரா அவ்விடத்தில் இருக்கும்.

நோயாளிகள் – ஒரே இடத்தில் அமர்ந்து இருந்தாலோ படுத்து இருந்தாலோ.

அவர்கள் எழுந்து சென்ற பிறகு, நாம் அவ்விடத்தில் அமர்ந்தால் ... நமக்கும் ஒரு சில பாதிப்புகள் ஏற்படும் என்பது விதி.

மனம் பலவீனமாக இருப்பவர்கள் எளிதில் பாதிக்கப்படுவார்கள்.

பஸ் பயணத்தின் பொழுது – நசுங்கி, பிதுங்கி வெளியே வந்த பிறகு ... ஒரு வித அசதி ஏற்பட்டு இருக்கும்.

நம்முடைய ஆரா – பல மனிதர்களின் ஆராவுடன் கலந்து நிறம் மாறி இருக்கும். சிதைந்து இருக்கும்.

இதை பஞ்சபூத சக்திகளால் (நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு) சுத்தபடுத்துவது – என்ற முறை உண்டு. குளிர்ந்த காற்று உடலில் பட்டால் – நம்முடைய ஆரா கொஞ்சம் சுத்தமாகும்.

அடுத்து – நீர், – குளிர்ந்த நீரினால் உடலை சுத்தபடுத்தினால் மேலும் சுத்தமாகும் நமது ஆரா

எல்லாவற்றையும் விட சக்தி வாய்ந்தது நெருப்பு. நெருப்பினால் நமது ஆராவை சுத்தபடுத்துவது என்பதை தான் நமது முன்னோர்கள் சுற்றி போடுவது – என்று கூறி வந்தனர்.

பூசணிக்காயில் ... கற்பூரம் ஏற்றி, அந்த நெருப்பை நமது உடலை சுற்றி உள்ள ஆராமீது படும்படி ... (உடல் மீது நெருப்பு படாமல்) நெருப்பை லாவகமாக சுற்றி விடுவது தான் இது.

இதை அர்த்தம் தெரியாமல் செய்வதுதான் – வருத்தபட வேண்டிய விஷயம்.

பெரும்பாலும் – வெளியே போய்விட்டு ... வீட்டிற்குள் நுழையும்பொழுது / வரவழைக்கும் பொழுது தான் இதை செய்து வீட்டிற்குள் அனுமதிப்பார்கள் (இனியாவது அர்த்தம் தெரிந்து சுற்றி போடுங்களேன்)

அடுத்து,

சுற்றி போடுபவர்களுக்கும் – ஒரு வித மனவலிமை தேவை. எண்ணங்கள் சுத்தமாக இருந்தால் – நம்முடைய உடலில் உள்ள ஆராவும் சுத்தமாக இருக்கும்.

இப்பொழுது புரிந்து இருக்கும். குழந்தையின் நோயை குணப்படுத்த அந்த வயதான பெண்மணி செய்த சூஷ்மம் என்னவென்று.

குழந்தையால் – நாட்டு மருந்து சரக்குகளை சாப்பிடமுடியாது. ஆகையால் நாட்டு மருந்துகளை, குழந்தையின் ஆரா மீது படும்படி சுற்றி ... அந்த ஆராவை அப்படியே இழுத்து வந்து நெருப்பில் கொண்டு வந்து சேர்ந்துவிட்டார்.

இப்பொழுது நெருப்பில் இருந்து சில கதிர்கள் – நாட்டு மருந்தின் ஆரா கதிர்கள், எல்லாம் ... வந்த வழியே பாய்ந்து, குழந்தையை, சென்று அடைந்து, நோயை குணமடைய வைத்தது.

குழந்தை – மருந்து – நெருப்பு. மூன்றும் கண்களுக்கு தெரியாத அளவு இணைக்கப்பட்ட உள்ளது. இப்படி பலவிஷயங்கள் கலந்தது தான் ஆவிகள் மூலம் செய்யப்படும் பரிகாரங்களும்.



# உங்கள் எதிர்காலம்
## உங்கள் கண்களில்



**கண்கள் –**

ஆன்மாவின் ஜன்னல்!

எவ்விதமாக காலங்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் கட்டுபடாத அப்பாற்பட்ட ஒரு சக்தி ... நம்முடைய ஆன்மா!

மனித உடலில் (விழித்து இருக்கும் நிலையில்) தற்காலிகமாக சிறைபடுத்தப்பட்டுள்ள மஹா சக்தி.

பிரபஞ்ச சக்தி!

ஆவிகள் மூலம் செய்யப்படும் பரிகாரமுறைகள் இந்த பிரபஞ்ச சக்தியை குறிவைத்து – செய்யப்படுகின்றன.

ஆம். உங்கள் கண்களை – குறிவைத்து செய்யப்படுகின்றன.

கண்கள் பொய் சொல்வதில்லை. மனிதன் ஆயிரம் கஷ்டங்களை வாய் மொழியால் மிகைப்படுத்தி வெளிபடுத்துவான்.

நான் – அவைகளை ஒதுக்கிவிட்டு சம்பந்தபட்ட நபரின் கண்களை உற்று நோக்குகிறேன். சோகம், துக்கம், விரக்தி, தோல்வி, பயம் எல்லாமே அந்த கண்கள் காண்பித்து விடும்.

ஆக, பரிகாரத்திற்கு முன் ஒரு புகைப்படம் எடுத்து கொடுக்க சொல்வேன்.

இரண்டு புகைபடங்களின் கண்களை கவனித்தால் ... (கண்களை மட்டும் கவனித்தால்!) ஆத்மாவின் பிரகாசம் கூடி உள்ளது தெரியும். இனி என் பணி முடிந்தது என்பதை புரிந்து கொள்வேன்.

இது போல் ஏராளமானவர்களுக்க – கண்களில் ஆத்ம ஒளியை பிரகாசிக்க செய்து அவரவர் எதிர்காலமே மாறும் படி செய்து உள்ளனர் ... நமது ஆவிகள்.

ஜாதகத்தில் தோஷம் உள்ளவர்கள் – தோஷம் இல்லாதவர்கள் அனைவருமே இதை செய்து கொள்ளலாம்.

கண்களில்

தைரியம், தன்னம்பிக்கை, சந்தோஷம், அமைதி, சுறுசுறுப்பு, திருப்தி எல்லாமே வெளிபடும்படி செய்துவிட்டால்

வாழ்க்கையே மாறும்! எதிர்காலம் மிக பிரகாசமாகும். உங்கள் கண்கள் என்ன சொல்கிறது? என்பதை புகைபடத்தை எடுத்து ஆராய்ந்து பாருங்கள்.

**(பின்வரும் – இரண்டு ஆதாரங்களில் உள்ள புகைபடத்தின் கண்களை கவனிக்கவும்)**

# மனநோயை மாற்றும்
# ஆவிகள்

24-10-2002ல் என் மகனின் ஜாதகத்தை மட்டும் காட்டினோம். பார்த்ததுமே சொல்லிவிட்டார்! – இவருக்கு மனநிலை பாதித்து இருக்குமே! என்று ...

அதெப்படிங்க! வெறும் ஜாதகத்தை, கட்டத்தை பார்த்து சொல்ல முடிந்தது என்று ஆச்சரியப்பட்டோம்.

டாக்டர்களும் –

வெறும் தூக்கமாத்திரைகளை கொடுத்து தூங்க வைப்பது போலவே ... செயல்பட்ட வந்தனர்.

சமீபகாலமாகவே – ஆர்.பி.ஹரி சார் பற்றி அதிகம் கேள்விபட்டோம். அதனாலே இறைவன் விட்ட வழி என்று அவரை சந்தித்தோம். ஆனால் ... நாங்கள் எதுவும் சொல்லாமல் அவராகவே பிரச்சினையை கூறியதில் எங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

அவரும் சில பரிகாரமுறைகளை கடைபிடிக்கும்படி கூறி ஜுலை 2003க்கு மேல் பூரண குணமடைந்து விடுவார் என்று கூறி ... ஆவிகள் மூலம் ஆசிர்வாதம் பெற்று தந்தார்.

ஆச்சரியப்படும்படி – அவர் கூறியபடியே என் மகன் பூரணகுணமடைந்து விட்டான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

**பரிகாரத்திற்கு முன் – எப்படி இருந்தார்.**



பரிகாரத்திற்கு முன்

பரிகாரம் செய்த பிறகு ... எப்படி உள்ளார் என்பதை புகைபடங்களை பார்த்தால் புரியும்.

V.Vijaya Sundari -
AP- 195 10th Street,
I Block, Anna Nagar
West, Chennai - 40.



பரிகாரத்திற்கு பின்

## பின்குறிப்பு

பொதுவாக என்னுடைய பரிகார முறைகள் ஆவிகளுடனும், மனிதனின் ஆத்மாவுடனும் சம்பந்தபட்டது.

மனித உடலில், ஆத்மாவின் ஜன்னல் நம்முடைய கண்கள். கண்களை குறிவைத்தே – பரிகாரங்கள் செய்யப்படுகிறது. இப்புகைபடத்தில் பாதிக்கப்பட்டவரின் கண்களை மட்டும் கவனியுங்கள். அதே நபர் – குணமடைந்த பிறகு அவருடைய கண்கள் வெளிப்படுத்தும் செய்தியை கவனிக்கவும் பூரண குணம் அடைந்து விட்டார் என்பது தெரிகிறது அல்லவா? இதுபோல் ஆராய்ச்சிக்காக – பலருடைய புகைபடங்களை சேகரித்து உள்ளேன். – ஹரி

# மேலும் ஒரு ஆதாரம்!



பரிகாரத்திற்கு பின்



பரிகாரத்திற்கு முன்

பரிகாரங்கள் செய்த பிறகு, ஹரி சார் சொன்னது போல் – 18 ஏப்ரல் 2000ல் எனக்கு, பெரிய அளவில் சொத்துக்கள் பாகபிரிவினையில் கிடைத்தது. ஜுலை 2-000ல் தொழில்ரீதியாக பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்பட்டது. என் நிலைமையே நல்ல விதத்தில் மாறியது. அதெல்லாம் கூட பெரிய விஷயமில்லை என் ஜாதகத்தை பார்த்து, என் முட்டியில் மிக பெரிய தழும்பு உள்ளதை எப்படி கண்டு பிடித்தார்? என்பது தெரியவில்லை.

**S. Ram Gangadar**
**Plot No.146, 5th Street, Kumaran Colony,**
**Vadapalani, Chennai - 26.**

# முஸ்லீம்களுக்கு – இந்து ஜோதிடம் பலிதமாகுமா?

10 வருடம் முன்பு, குடும்பத்தை விட்டு, பிரிந்து மலேஷியா சென்று விட்டேன். நான் உயிருடன் இருக்கிறேனா? இல்லையா? என்பதே என் குடும்பத்தாருக்கு தெரியாது.


ஆகஸ்ட் மாதம் 1997ல் தன் தாயார் –

ஜோதிடர் ஹரியை சந்தித்து, ஜாதகம் கணிக்க சொல்லி பார்த்தார். 2001ல் மார்ச், ஏப்ரல் காலகட்டத்தில் நான் உயிருடன் இந்தியா திரும்புவேன் என்று கைப்பட என் ஜாதகத்தில் எழுதி கொடுத்தார்.

பலன் சொல்லி வருடம் கழிந்தது ...

ஜாதகத்தை வைத்துகொண்டு என் தாயாரும் எனக்காக காத்து இருந்து இருக்கிறார்.

எதிர்பாராத திருப்பங்கள் என் வாழ்க்கையில் ஏற்பட்டதால் 27-4-2001ல் நான் இந்தியாவிற்கு திரும்பி வந்தேன்.



எல்லோருக்கும் அதிர்ச்சி, ஆச்சரியம்! ஆனந்தம் ...

என் தாயார் என் ஜாதக புத்தகத்தை என்னிடம் காட்டினார். அதில் ஆர்.பி.ஹரி அவர்கள் ஏற்கனவே நான் திரும்பி வரபோகும் காலத்தை துல்லியமாக எழுதி இருப்பதை கண்டு எனக்கு பிரமிப்பாக இருந்தது.

**முகமத் மாலிக் புதிய எண். 51, செங்கல்வராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5.**

# எச்சரிக்கையை மீறியதால் கொலை பழி வீழ்ந்தது


தாத்தா-பாட்டி படுகொலை

என் மகன் A.பிரபுவின் ஜாதகத்தை பார்த்து விட்டு, உங்கள் மகனுக்க நேரம் ரொம்பவும் மோசமாக உள்து. 10.09.1999 முதல் 22.03.2002 க்குள் – கோர்ட் படி ஏறவேண்டிவரும் ஆகையால் ரொம்பவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அவனுடைய பெயர் இக்காலகட்டத்தில் கெட்டு போகும் – வீண் பழி விழும் இதற்கான ஒரு பரிகாரத்தை செய்துவிட்டால் இது போன்ற அசம்பாவிதம் எதுவும் நடக்காது! என்று கூறினார்.

23வயது ஆகும் – என் மகனுக்கு கோர்ட் படி ஏறும் சூழ்நிலை எப்படி வரும்?என்று யோசித்து பார்த்தால் – விடையே கிடைக்கவில்லை. ஆகையால் – ஹரி சாரின் பலனுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் பரிகாரம் செய்யும் உத்தேசம் இல்லை என்று கூறிவிட்டோம்.

பிறகு, ஹரி சார் கூறினார் ... இக்கால கட்டத்தில் ஜாதகனுடைய தாத்தா பாட்டி இருவரும் மரணம் அடைவார்கள் என்று கூறினார். இவருக்கும் வயதாகிவிட்டதால் வாய்ப்பு இருக்கிறது – என்று விட்டுவிட்டோம்.

ஆனால், நிலைமையே தலைகீழாக மாறியது. என் மாமனாரும், மாமியார் அவர்களும் 16.06.2000ல் கொலை செய்யபடவும், பழ

என் மகன் மீது வீழ்ந்தது. போலீஸார் என் மகனை கைது செய்து கோர்ட்டில் நிறுத்தியது. ஹரி சாரின் பலன் அப்படியே பலித்தது கண்டு, அதிர்ச்சி அடைந்தோம். பரிகாரம் செய்து இருக்கலாமே! என்று தோன்றியது.

**செல்வி 105, சோலையப்பன் தெரு 3வது மாடி,**
**வண்ணாரப்பேட்டை.**

---

# திருமண வாழ்க்கையில் .... ஏமாற்றமா?



திருமணம் ஆன பிறகு தான் தெரிந்தது என் மனைவிக்க அடிக்கடி காக்காய் வலிப்பு வரும் என்று.

மிக பெரிய அளவில் திருமண விஷயத்தில் – ஏமாற்றம் அடைந்தேன். ஏமாற்றபட்டேன்.

உடனே விவாகரத்து செய்ய முடிவு எடுத்தேன். எனினும் 1998ல் திரு.ஆர்.பி.ஹரி அவர்களை பற்றி கேள்விபட்டு இருந்தேன். அவருடைய ஆலோசனையை கேட்க சந்தித்தேன்.

நான் எதுவும் சொல்லாமல் ஜாதகத்தை பார்த்து – அவரே எல்லா விஷயத்தையும் கூறினார் வசியம் செய்வது போல் பேசி, விவாகரத்து செய்யும் எண்ணத்தை மாற்றினார்.

பரிகாரங்கள் செய்து ... காக்காய் வலிப்பு நோயை குணப்படுத்தவதாக வாக்களித்து நோயின் தீவிரத்தை குறைத்தார். இப்பொழுது நாங்கள் மிக ஒற்றுமையாக வாழ்கிறேன்.

**I.Rajan 36/B 'G' Pocket, Maroda Sector, Bhilai Steal Planet,**
**Bhilai - 490010. Durg Dist., Madhya Pradesh**

# நாகதோஷத்தை – அலட்சியம்



# செய்யாதீர்கள்

ஆவிகளை பொருத்தவரையில் குற்றவாளிகளுக்கும், தீய எண்ணம் கொண்டவர்களுக்கும் உதவுவது இல்லை.


சென்னையில் நேற்றிரவு பரிதாப சம்பவம்

எட்டு மாத கர்ப்பிணி பெண் மர்மமான முறையில் சாவு

ரமேஷ் என்பவரின், மனைவி சுதா 30.03.2001ல் தூக்கு போட்டு இறந்துவிட்டார்.

**8 மாத கர்பிணி.**

தற்கொலையா? கொலையா? ...

போலீஸ் கஸ்டெடியில் தீவிர விசாரணைக்கு பிறகு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார் – ரமேஷ்

இரண்டு முறை பெயிலில் எடுக்க விரும்பி, விண்ணப்பம் செய்தும் – கோர்ட் தள்ளுபடி செய்தது.

அவருடைய குடும்பத்தார் – இவ்விஷயமாக திரு. ஆர்.பி.ஹரி அவர்களை அனுகினார்கள். ஜாதகத்தை பார்த்து, நாகதோஷம் தீவிரமாக இருப்பதால் தான் இது நிகழ்ந்துள்ளது.

கணவன் மனைவி அன்பாக தான் இருந்து இருக்கிறார்கள். சிலர் சிறிய விஷயத்திற்கு உணர்ச்சி வசப்பட்டு – தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இது கிரக தூண்டுதல் காரணமாக – நிகழ்ந்துள்ளது. இது தற்கொலை தான் – என்பதால், ஆவிகள் பூரண உதவி செய்வார்கள். வரும் 24.04.2001ல் மறுபடியும் பெயில்

கிடைக்க விண்ணப்பிக்கவும். உடனே! பெயில் கிடைக்கும் என்று ஆர்.பி.ஹரி சொன்னது போல் – செயல்பட்டதில்.

25.4.2001ல் பெயில் கிடைத்து!

26.4.2001ல் – ரிலீஸ் செய்யப்பட்டார். பிறகு, பல பூஜைகள் மூலம் – பெண்ணின் தந்தை மனம் மாறினார். கேஸ் வாபஸ் செய்யப்பட்டது.

R.ரமேஷ், எண். 47, அசோக் நகர்,
அரும்பாக்கம் – சென்னை – 106.

## ஆவிகள் மூலம் – இறைவனின் தீர்ப்பு!

டாக்டர் அம்பேத்கார் நகர், ஆஸ்பிரான் தோட்டம், கீழ்பாக்கம், சென்னை – 10ல் புறம்போக்கு இடத்தில் நூற்றுக்கணக்கான ஏழை ஜனங்கள் குடிசை போட்டு வாழ்ந்து வந்ததில்... அடிக்கடி – அரசு அதிரடி நடவடிக்கை எடுத்து, குடிசைகளை பிரித்து போட்டு, ஜனங்களை விரட்டியது.

இது சம்பந்தப்பட்ட வழக்கை வெற்றி அடையும்படி செய்ய – 1986 முதல் வழக்கை நடத்தி செல்லும் முக்கியஸ்தர்கள் ஆர்.பி.ஹரி அவர்களை மே 1991ல் சந்தித்தனர். பரிகாரங்கள் பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டது விளைவு?

மூன்று மாதத்தில் 13 ஆகஸ்ட் 1991ல் பொதுமக்களுக்கு சாதகமாக உயர்நீதி மன்றத்தில் ஜட்ஜ்மெண்ட் ஆனது.

ஆவிகள் மூலம் இறைவனின் தீர்ப்பு – பிரமிக்க வைத்தது. நூற்றுக்கணக்கான ஏழைக் குடும்பங்களுக்கு சொந்த இடம் கிடைத்தது.

# மனம் மாறிய – இந்து தீவிரவாதி



30-07-2001ல் போலீஸ் பாதுகாப்புடன் திரு.ஆர்.பி.ஹரி அவர்களை சந்தித்தார் அதிரடி ஆனந்தன் முஸ்லீம் தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் முதல் இருப்பவர்.

29-11-97ல் கோவையில் போலீஸ்ாரர் செல்வராஜ் கொலை செய்யப்பட்டதும் ... பிறகு அது இந்து முஸ்லீம் கலவரமாக வெடித்து, இரத்தம் சிந்திய சகோதரர்களின் குடும்பத்தின் கண்ணீரை தமிழகம் மறந்து விட முடியாது!

அதன் பின்னனியில் பலர் கைது செய்யப்பட்டதில் இவரும் ஒருவர். இவருடைய ஜாதகத்தை பார்த்து. கடந்த கால விஷயங்களை துல்லியமாக கூறிய பிறகு தான். தான் யார் என்பதை ஆர்.பி.ஹரியிடம் தெரிவித்தார்.



எதிர்காலம் பற்றி பல விஷயங்களை கூறியதில் மிக பெரிய அளவில் மனமாற்றம் அடைந்தார்.

எதுவுமே நம்ம கையில் இல்லை ... போலிருக்கிறது என்று

ஆச்சரியப்பட்டவருக்கு அவருடைய உள்மனம், ஆத்மா ... எதற்காக பிறந்து இருக்கிறார் என்பதை பற்றி விளக்கியதும்.

பூரணமாக மனம் திருந்தினார். தீவிரவாதத்தை கைவிட்டார்!

ஆயுதத்தை எடுக்காதீர்கள் - முஸ்லீம் சகோதரர்களால் உங்களுக்கு 100% சதவிகிதம் உயிருக்கு ஆபத்து இல்லை, என்று ஆவிகள் மூலம் ஆசிர்வதித்தார் ஆர்.பி.ஹரி., அவர்களை சந்தித்த பிறகு 9.8.2001ல் குமுதம் ரிப்போட்டரில் அவருடைய மனம் திருந்திய பேட்டி வெளியானது.



முஸ்லிம் தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் இருப்பதாகச் சொல்லப்படுபவர் [illegible] ஆனந்தன். இரண்டரை ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் விடுதலை ஆனார். இவர் கூடிய விரைவில் அ.தி.மு.க.வில் இணையப் போவதாகவும் தகவல். அவரைச் சந்தித்துப் பேசினோம்.

"இங்குள்ள அனைத்து இந்து இயக்கங்களும் இந்துக்களைத் தூண்டிவிட்டு, மாற்று மத வெறுப்புணர்வை ஏற்படுத்தி, சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றிருக்கின்றன. இன்னும்

"புலி வாலை விட்டு விட்டேன்"

அதற்குரிய திட்டத்தோடு உலவுகின்றன. அதனை இனியும் வளர விடக்கூடாது. அதற்கு உறுதுணையாய் இருக்கக்கூடாது என்றுதான் அவற்றிடமிருந்து விலகியிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் உண்மையான [illegible] கருத்துக்களை மையப்படுத்திப் பேசி, இனிவரும் காலங்களில் இந்துத்வா சக்திகளின் முகத்திரையைக் கிழிக்கப் போகிறேன்.


பா.ஜ.க. தேர்தலுக்குப் பிறகு ராமர் கோயில் பிரச்னையைக் கைவிட்டுவிட்டது. காஷ்மீர் பிரச்னையில் பின்வாங்கியது. இன்றைக்கு அவர்கள் தங்கள் கட்சியிலேயே சிறுபான்மைப் பிரிவு ஒன்றை ஆரம்பித்து அதில் தலைவர்களைப் போட்டு ரொம்பக் கேவலமாக நடந்து வருகிறார்கள். குறிப்பாக ராமர் கோயில் பிரச்னையில் இரட்டை வேடம் போடுகிறது பா.ஜ.க.

நான் இதுவரை தவறான பாதையில், தவறான வழிகாட்டுதலில், என்னுடைய வாழ்க்கையை மட்டுமல்ல, நான் சார்ந்த பலருடைய வாழ்க்கையையும் வீணாக்கி விட்டேனே என்கிற வேதனையோடு இருக்கிறேன். நாளைக்குத் தேர்தல் வருகிறபோது திரும்ப ராமர் கோயில் பிரச்னையைக் கிளப்புவார்கள். இங்குள்ள இந்து இளைஞர்களையெல்லாம் மீண்டும் கூட்டிக்கொண்டு போவார்கள். அது தவறு. நடக்கக்கூடாது.

என் பெயரை முஸ்லிம் தீவிரவாதிகள் அவ்வளவு சுலபமாகத் தம் பட்டியலிலிருந்து நீக்கிவிட மாட்டார்கள். அது எனக்கும் தெரியும். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அந்தப் புலிவாலைப் பிடித்துக் கொண்டேதான் போராடியிருக்க வேண்டும். அப்படித்தான் அங்கே நிறைய பேர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் விதிவிலக்காகப் புலிவாலை விட்டிருக்கிறேன். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இன்னும் நிறைய இளைஞர்களைத் திசை திருப்பி ஏராளமான உயிர்கள் பலியாவதை அனுமதிக்க வேண்டுமா? என் உயிருக்கு எந்த ஆபத்து வந்தாலும் பரவாயில்லை. இனி ஒரு இளைஞன் என்னால் திசை திருப்பப்பட்டான் என்று பேச்சு வரக்கூடாது அவ்வளவுதான்."

- அ.க.சே.

# ஆச்சரியமான உண்மை!



30-12-2002ல் என் கணவரின் ஜாதகத்தை பார்க்க காஞ்சிபுரத்திலிருந்து வந்தேன். ஜாதகத்தை பார்த்ததும் 21-09-2002 இந்த ஜாதகர் இறந்து விட்டாரே, இப்பொழுது எதற்கு பார்க்க வந்தீர்கள்? என்று கேட்டு திகைக்க வைத்தார்.

குறிப்பாக (லாரி மோதி) வாகன விபத்தில் இறந்து விட்டார் என்பதை குறிப்பிட்டு கூறினார். இது விபத்துதானே தவிர முன்விரோத செயல் அல்ல! ஆகையால் மரணத்தை பற்றி தெரிய தானே வந்தீர்கள்! என்று கூறி வாயடைத்தார்

**R.S.**மாலதி, 15-B,1 உலகளந்தான் சன்னதி தெரு, பெரிய காஞ்சிபுரம்.

---

# பலிதமாகும் எதிர்கால வாக்குகள்

ஜெர்மணி கலர் லேப்பில், எடிட்டராக பணிபுரியும் – திரு. ஜனார்த்தன நாயுடு அவர்களின் மகளின் திருமணம், பல ஆண்டுகள் தள்ளி போனதால் 1990ல் திரு. ஹரி அவர்களை சந்தித்தார்.

ஆகஸ்ட் 1991ல் உங்கள் மகளின் திருமணம் நடக்கும் என்று – திரு. ஹரி அவர்கள் கூறியது போல் 22.08.1991ல் மேற்கூறியவரின் மகளுக்கு திருமணம் நடந்தது.

S.ஜனார்த்தன நாயுடு
எண். 46, விவேகானந்த காலனி, வடபழனி, சென்னை – 26.

**குறிப்பு : மேற்குரியவர் தற்சமயம் உயிருடன் இல்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.**

# தீர்க்கவே முடியாத – திருமண பிரச்சனை

## கர்ப்பை சுருங்கியுள்ளதால்



வயதுக்கு வரமுடியாத சூழல் ஏற்பட்டது. இதனால் திருமண வாழ்க்கையே அஸ்தமித்த நிலையில், (வயது 27) யாரும் திருமணம் செய்து கொள்ள முன் வராத நிலையில் ஆகஸ்ட் 1998ல் ஆர்.பி.ஹரி சாரை சந்தித்து, ஆலோசனை கேட்டோம்.

சில பரிகாரங்கள் செய்தால் அடுத்த வருடமே 100% திருமணம் ஆகிய செட்டில் ஆகிவிடலாம் என்று வாக்குறுதி கொடுத்தார்.

நம்பிக்கையுடன் பரிகாரங்கள் செய்தோம். ஆச்சரியப்படும்படி – அரபு நாட்டிலிருந்து, ஒரு வரன் வந்தது. கைகுழந்தையை தனியே தவிக்க விட்டு பிரசவத்தின் பொழுது இறந்து போன மனைவியின் கடைசி வாக்குபடி, குழந்தை பெற்று கொள்ளமுடியாத பெண்ணை தேடியவருக்கு ... என் விவரம் கிடைக்க ... மிக பெரிய அளவில் என் திருமணம் 11 ஜுலை 1999ல் நடந்தது. அவருடைய குழந்தைக்கு நான் தாயானதில் எனக்கு மிக மகிழ்ச்சி ஏற்பட்டது.

தற்சமயம் – கணவருடனும், குழந்தையுடனும் மிக மகிழ்ச்சியாக உள்ளேன்.

எனக்கு திருமணம் என்பது கனவிலும் நினைத்து பார்க்க முடியாத ஒன்று ... இந்த விஷயத்தை பொருத்த வரையில்

ஹரி சாரை என்னாலும் என் குடும்பத்தாராலும் மறக்க முடியாது. என் திருமணத்தின் பொழுது என் குடும்பமே ஆனந்த கண்ணீர் வடித்தது.

**R. Subhasree D/o. R. Ramabadran**
**Plot No.-10 Marudham Nagar / Thiruppal**
**Madurai - 675014**

# டாக்டர்கள் தவறு செய்ததால் – மீண்டும் ஆப்ரேஷன்



ஏப்ரல் 1987, வி. சண்முக சுந்தரம் – திரு. ஹரி அவர்களிடம் தன் ஜாதகத்தை காண்பித்தார். ஜாதகத்தை உற்று நோக்கி திரு. ஹரி – ஏற்கனவே ஓர் ஆப்ரேஷன் வயிற்றில் நடந்து இருக்குமே? என்று கேட்க.

ஆம் – என்று பதில் வந்தது. டாக்டர்கள் ஆப்ரேஷன் செய்யும் பொழுது – தவறு செய்துவிட்டனர். ஆகையால் ஜூன் அல்லத ஜூலையில் மீண்டும் ஒரு ஆப்பிரேஷன் நடக்கும் என்று பலன் கூறினார் ஹரி – அதன்படியே!

மீண்டும் வயிற்றுவலி தொடர்ந்தால் – ஸ்கேன் எடுத்து பார்த்தார்கள் டாக்டர்கள் தவறுதலாக ஆப்பிரேஷன் போது ஒரு சிறிய கருவியை வயிற்றில் – மறந்து வைத்து தைத்துவிட்டது கண்டுபிடிக்கப்பட்டது. விளைவு? ஹரி அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் மீண்டும் ஆப்ரேஷன் செய்யப்பட்டது.

வி.சண்முக சுந்தரம் – 12 ஜி, பஸ் கண்டக்டர்
கே.கே.நகர் பஸ் டிப்போ, சென்னை.

## விதியின் முடிவும், ஆரம்பமும்!!

1991ல் என் கணவருக்கு கைகால் வீழ்ந்துவிட்டது.

1992ல் திரு. ஹரி அவர்களிடம் ஜாதகம் காட்டினேன்.


1994ல் என் கணவர் மரணம் அடைவார்!

1994ல் மூத்த மகனுக்கு அரசு வேலை கிடைக்கும் என்று திரு. ஹரி பலன் கூறியபடியே!

1994ல் என் கணவரும் இறந்தார் – மூத்த மகனுக்கு அரசு வேலை கிடைத்தது.

சங்கரி, எண். 5, வெங்கடசாமி சந்து, டாக்டர் நடேசன் சாலை,
ஐஸ் ஹவுஸ், சென்னை – 5.

# மூலிகை பெட்ரோல் இராமர் பிள்ளை



பைனான்ஸ் கம்பெனிகளின் வீழ்ச்சியை தொடர்ந்து பொருளாதார குற்றங்களை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டு, அதன் தலைமை நீதிபதி அவர்களுடன் மூலிகை பெட்ரோல் ராமர் பிள்ளை அவர்கள் திரு.ஆர்.பி.ஹரி அவர்களை சந்தித்தார் (மார்ச் 1998ல்) ஆகஸ்ட 1998ல் இறுதியில் - சூழ்நிலை கொஞ்சம் சாதகமாகி, செப்டம்பர் 1998ல் மூலிகை பெட்ரோல் விற்பனைக்க வரும் என்று ஆர்.பி.ஹரி அவர்கள் கூறிய படி செப்டம்பர் 1998ல் - பகிரங்க விற்பனைக்கு மூலிகை பெட்ரோல் வந்தது.

பிறகு அது பிசுபிசுத்து போனதும் போலிஸ் பிரச்சனை வந்ததும் தனிகதை

# அதிர்ஷ்டத்தை - தக்கவைத்து கொள்ள ஜோதிட ஆலோசனை தேவை!


குடிசையில் வாழ்ந்தவர்

பல ஆண்டுகள் (1988 வரை) குடிசையில், சாப்பாட்டிற்கே கஷ்டப்படும் அளவுக்கு கஷ்ட ஜீவனம் நடத்தி வந்த திரு. எத்திராஜ் என்பவர் - திரு. ஹரி அவர்களை சந்தித்தார்.

இவருடைய மூன்றாவது குழந்தையின் ஜாதகத்தில் சில அதிர்ஷ்ட குறிப்புகள் கிடைத்தது. அதை பின்பற்றினால் சில வருடங்களில் (1992க்குள்) சொந்த வீட்டில் ஆடம்பரமாக வாழ்வீர்கள் என்ற பலன் கூறினார் – ஹரி.

அன்று முதல் திரு. ஹரி அவர்களின் ஆலோசனை படி, அதிர்ஷ்ட குறிப்புகளை பின்பற்ற தொடங்கினார் திரு. எத்திராஜ் 1988 வரை, வடபழனி, ஆற்காடு சாலையில், 229 நம்பர் வீட்டுமாடியில் அமைக்கப்பட்ட ஓலை குடிசையில் வாழ்ந்த திரு.எத்திராஜ். (தற்சமயம் - அவ்விடத்தில் ஹோட்டல் சரவணபவன் உள்ளது).


நவீன வசதிகளை அடைந்தார்!

இன்று (1992 முதல்) சொன்தமாக அமுதா அப்பாட்மென்ட்டில் 6 லட்சம் மதிப்புள்ள ப்ளாட்டில் – சகல நவீன ஆடம்பர வசதிகளுடன் வாழ்கிறார்?!

ஏ.எத்திராஜ்ட, எண். 26எ, அமுதா அப்பார்ட்மென்ட்ஸ், அம்மன் கோயில் தெரு, (அருணா ஹார்ட் வேர்ஸ் பின்புறம்) 100 அடி சாலை, வடபழனி, சென்னை – 26.

பின்குறிப்பு : மேற்கூறியது பழைய செய்தி, இவருக்கு 26ம் நம்பர் ராசியாக இராது 26ஐ கூட்டினால் 2+6=8 வரும் என்பதால் இந்த வாழ்க்கை நிலைக்காது என்று எச்சரிக்கை விடுத்தும், மீறி அவ்வீட்டை வாங்கினார் ... சில வருடங்களில், அதை விற்கும் சூழலும் ஏற்பட்டது.

# எல்லாவற்றிற்கும்




# நேரம் வரவேண்டாமா?

1991ல் நிச்சயதார்த்தம் முடிந்து, திருமணத்திற்கு நாள் குறிக்க வேண்டிய வேளையில் திரு. ஹரி அவர்களிடம் மணமகனின் ஜாதகம் கொடுக்கப்பட்டது.

ஜாதகத்தைப் பார்த்து, ஹரி அவர்கள் சொன்னார் மணமகனுக்க 1994ல் தான் திருமணம் ஆகும் என்று ... ஆச்சரியப்படும்படி

நிச்சயம் செய்யப்பட்ட, முறை பெண்ணை திருமணம் செய்யவே - ஏகப்பட்ட தடங்கல், பிரச்சனைகள் எழுந்து திருமணம் நின்று போகவேண்டிய சூழல் உருவாகி, பின் சமாதானம் ஏற்பட்டு கடைசியாக 23.01.1994ல் திருமணம் சுபமாக நடந்தது...

**Look Fit Mens Wear**

கோபால் டெய்லர், நெ.54, ஜவஹர்லால் நேரு தெரு,
100 அடி சாலை, வடபழனி, சென்னை - 26.

# விதிப்படித்தானே நடக்கும்?

1986ல் உயர் கிரைம் போலீஸ் அதிகாரியான திரு. பாண்டியராஜன் அவர்களுக்கு – ஒரு வாரத்தில் பிரமோஷன் வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிரபல ஜோதிடர் ஒருவர் – தற்சமயம் பிரமோஷன் 100% கிடைக்கும் என்று உறுதிப்படுத்தினார். ஆனால் ... திரு. ஹரி அவர்களோ உங்கள் பிரமோஷன் ஒரு வருடம் கழித்து தான் கிடைக்கும் என்று கூறினார்.

அதன்படியே

விடுதலை புலிகள் ஆர்பாட்டம், ஆசிரியர்கள் போராட்டம், வன்னியர்கள் போராட்டம் எல்லாம் ஒன்று சேர்ந்து இவருடைய பிரமோஷனை தூக்கி சாப்பிட்டுவிட்டது. ஒரு வாரத்தில் வரவேண்டிய பிரமோஷன் ஒரு வருடம் கழித்து 1987ல் கிடைத்தது.

சுக்கிரனின் வலிமை காரணமாக – மிகமிக வசதியாக வாழப்போகிறீர்கள் என்று ஹரி அவர்கள் பலன், கூறியபடி, அப்பொழுது வாடகை வீட்டில் இருந்த திரு. பாண்டியராஜன் – தற்சமயம் அரண்மனை போன்ற சொந்த பங்களாவில் வசிக்கிறார்.

திரு. பாண்டியராஜன், 4/1, பாரதீஸ்வரன் காலனி, 5வது குறுக்குத் தெரு, அழகிரிபுரம், சென்னை – 24.

**குறிப்பு : மேற்குரிய நபர் சமீபத்தில் காலமாகிவிட்டார் என்ற செய்தி ... காலதாமதமாக கிடைத்தது.**

# 1 வருட ஜெயின் தண்டனை தப்பியது எப்படி



நவம்பர் 1990, 18 வயது பூர்த்தியாகாத இளம்பெண்ணை, ஏமாற்றி திருமணம் செய்து கொண்டதாக மணமகன் மீது வழக்கு தொடரப்பட்டது.

மணமகனுக்கு 7 வருட ஜெயில் தண்டனை கிடைக்க வேண்டிய சூழலில் ...

மணமகனின் பெற்றோர்கள், திரு. ஹரி அவர்களை சந்தித்தனர்.

சில நிமிட பிரார்த்தனைக்குப் பிறகு, "வழக்கு மணமகனுக்கு சாதகமாக முடியும்" என்று ஹரி அவர்கள் கூறியபடி, வழக்கு திடீர் என்று திசை திரும்பியது.

மருத்துவ பரிசோதனையில் பெண்ணிற்கு 18 வயதிற்கான உடல் வளர்ச்சி உள்ளது என்று மெடிக்கல் ரிசல்ட் வந்ததால், வழக்கு மணமகனுக்கு சாதகமாக முடிந்தது.

**Mrs.ரமணி சுகந்தி, எண். 35, பத்மநாபா நகர், சூளை, சென்னை, கோடம்பாக்கம் ராம் தியேட்டர் எதிரில்.**

# ஆவிகளின் அற்புதம்

## 3 கோடி ரூபாய் சொத்துக்கள் – உயில் மூலம் கிடைக்கும் அதிசயம்!

நாங்க ஹரி சாருடைய ஜோதிடத்தில் அதிக நம்பிக்கையுள்ள ஒரு குடும்பம்.

பல வருடங்களாக – எந்த பிரச்சினை வந்தாலும் அவரிடம் தான் போவோம்.

அவர் கூறியபடியே பல விஷயங்கள் மிக துல்லியமாக பலித்தது. எனக்கு 1983ல் திருமணமாகியது. என் மகன் விக்னேஷ் பிறந்தான்.

2000ல் என் என் மகனுக்கு 17 வயது ஆரம்பித்த சமயம்.

என் மகனுக்கோ ஒரு சகோதனோ சகோதரியோ இருந்தால் நல்ல இருக்குமே ஒரே ஆதங்கம்.

எங்களுக்கும் – இன்னோரு குழந்தை இருந்தால் நன்றாக இருக்குமே என்று அடிக்கடி தோன்றும்.

திரு. ஹரி எழுதிய புத்தகம் ஒன்றில் போன ஜென்மத்தில் அதிக புண்ணிய காரியங்கள் செய்த ஆத்மா – நம் குடும்பத்தில் குழந்தையாக பிறந்ததால் அந்த குடும்பமே பொருளாதாரத்தில் மிக பெரிய அதிர்ஷ்டத்தை அடையும் என்று எழுதி இருந்தார். அதை படித்ததும் –

எங்களுக்கும் ஒரு ஐடியா தோன்றியது.




2வது குழந்தையாக – ஹரி சாரிடம் பூஜைக்காக ஏற்பாடு செய்யும்படி கூறி... போன ஜென்மத்தில் அதிகம் புண்ணியம் செய்த குழந்தை எங்களுடைய குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்று வேண்டினோம்.

என்ன ஆச்சரியம்?

**"பூஜை செய்ய ஆரம்பித்த அடுத்த மாதமே குழந்தை தங்கியது."**

திருமணமாகி, 17 வருடம் கழித்து, இந்த அதிசயம் நிகழ்ந்தது. 11.09.2001ல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதன் பிறகு நிலைமையே மாறியது.

எங்கள் தூரத்து உறவு முறையில் – எனக்கு தாத்த;ா முறை வேண்டும். திருமயமே செய்து கொள்ளாதே காரணத்தால் ... அவருடைய சொத்துகளுக்கு வாரிசு இல்லாமல் போனது. சொத்துக்காக உறவினர்கள் அவரை சுற்றி வந்த பொழுதும். என் 2வது குழந்தையின் மீது அவருக்கு பற்று பாசம் ஏற்படவும் – அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வந்து குழந்தை மீது அதிக பாசம் காட்ட துவங்கியதில், சூழ்நிலை மாறியது.

3 கோடி ரூபாய் மதிப்புள்ள அசையா சொத்துக்கள் அவருக்கு பிறகு என் இரண்டு மகன்களுக்கு எழுத போவதாக கூறி ஏற்பாடுகள் செய்ய துவங்கிவிட்டார்.

இதை நாங்கள் யாருமே எதிர்பார்க்கல!

விஜயலக்ஷ்மி

**M/80/2 - 31 Cross Street, Besant Nagar, Chennai**

**குழந்தை பாக்கியம் அடையும் முன்பு ... சில பரிகாரங்கள் செய்தால் ... எதிர்காலத்தை வளமாக்கும் அதிர்ஷ்ட குழந்தைகள் ஜனிக்கும் என்பது ஒரு அதிர்ஷ்ட விதி.**

# ஜோதிடம் மூலம் – இதை கூட சொல்ல முடியுமா?




மார்ச் 1998ல்...

ஹரி சாரிடம் ஜாதகம் பார்த்தோம் பல விஷயங்கள் கூறினார்.

எல்லாமே ஆச்சரியாகவும், பிரமிப்பாகவும் இருந்தது.

1999 பிப்ரவரி முதல் ஜுலைக்குள் போலீஸ் ஸ்டேஷன் படி ஏறவேண்டி வரும் என்று கூறினார்.

எங்களுக்கு – தூக்கிவாரி போட்டது, போலீஸ் என்றாலே எங்களுக்க ஒரு வித அலர்ஜியான விஷயம். (எல்லோருக்கும் தான்).

எங்களுக்கு – அதற்கான வாய்ப்பே இல்லை என்று வாதிட்டோம்.

இருப்பினும் – அவர் சொன்னது போலவே ஆயிடுச்சு

ஆம்!

எங்கள் வீட்டு பத்திரம் காணாமல் போகவும் (மேற்குறிப்பிட்ட காலத்தில்) போலீஸ்சில் புகார் செய்ய போலீஸ் ஸ்டேஷன் படி ஏற வேண்டி வந்தது.

பத்திரமும் – கிடைத்தது!

இந்த பலன் – ஆச்சரியமான விஷயமுங்க!

**சுலோச்சனா, புதிய எண். 39, பழைய எண். 15, குப்புசாமி தெரு, வெற்றி நகர், சென்னை – 82.**

# ஆவிகளின் எச்சரிக்கையை – சாதாரணமாக எடுத்து கொண்டதால்... ?!

24-12-1999ல்

என் மகன் சங்கருக்கு ஜாதகம் பார்த்தோம்.

ஜாதகத்தை பார்த்து கொண்டு இருக்கையில் என் கணவர் ராஜன் அவர்களை – கொஞ்சம் சூஷ்மமாக உற்று நோக்கி,

இந்த ஜாதகப்படி,

20-6-2000 முதல் தீய காலம் துவங்குகிறது. குடும்பத்தில் முக்கிய உறுப்பினர் மரணம் அடைவார்கள் என்பது விதி, ஆகையால் – கொஞ்சம் பரிகாரம் செய்து கொள்வது நல்லது என்றார்.

என் கணவரை வித்தியாசமாக பார்த்தபடி இந்த பலனை கூறியதால் – எனக்க ஒரு மாதிரி இருந்தது.

ஆனால் விதி யாரை விட்டது?

பரிகாரம் செய்யாமல் இருந்துவிட்டோம்.

என் கணவரை வெறிநாய் ஒன்று கடித்துவிட்டது. இதனால் வரிசையாக உடல் நலம் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு,

27-09-2000ல் என் கணவர் இறந்துவிட்டார்.

R.சேரமாதேவி, 268, ராஜரத்தன நகர், கொடுங்கையூர், சென்னை.

# ஏன் இந்த வேதனையான முடிவு?



**P.ராஜகோபால்**

**ஹோட்டல் சரவணபவன் என்று ... தலை நிமிர்ந்தவர்,**

**தலைகுனிய காரணம் என்ன?** No.8

**எண்களில் 8ம் நம்பர் மிக தீயதாகும். ஆரம்பம் எப்படி இருப்பினும் – முடிவு மிக சோகமாகவே இருக்கும்.**

**சில சமயம் மிக வேகமாக வளர்ச்சியை தந்து, உச்சியில் இருந்து, கீழே தள்ளிவிடும்.** 26-04-2004**ல் – ஜீவ ஜோதி வழக்கில்** 10 **ஆண்டு காலம் சிறை தண்டனை கிடைத்தது.**

**தேதியை கவனிக்கவும் – 26 = 2 +6 = 8**

இவருடைய பெயருக்கான எண்கள்

P. RAJAGOPAL

8+2+1+1+1+3+7+8+1+3

8 + 27 = 35   3 + 5 = 8

இப்பெயரை – மேலும் ஆராய்வோம்

P. R A J A G O P A L
8 2 1 1 1 3 7 8 1 3
1 3 2 2 4 1 6 9 4
4 5 4 6 5 7 6 4
9 9 1 2 3 4 1
9 1 3 5 7 5
1 4 8 3 3
5 3 2 6
8 5 8
4 4

கணக்கிடும் முறை
**P . R**
8 + 2 = 10 வரும்
10ஐ கூட்டினால்
1+0=1 வரும்
ஆகையால்
**P . R A**
8 + 2 + 1
1 3
4

**முடிவு என் 44ன் பலன்** – நியுமராலஜி சாஸ்திரத்தில் கீழ்க்கண்டவாறு உள்ளது.

இவ்வெண் ஏராளமாக பொருள் சேர்க்க உதவும் ஆனால் முடிவு நிச்சயம் சிறைவாசமே என்று மிக தெளிவாக கொடுக்கப்பட்டு உள்ளது.

சிறை கைதிகளின் – பெயரில் மெஜாரிட்டி எண் 8 ஏதாவது ரூபத்தில் தொடர்பு உடையதாக இருப்பதை காணலாம்.

1984ம் ஆண்டு ஒரே குடும்பத்தில் உள்ள 9 பேர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தூக்குதண்டனை அடந்த

JAYAPRAKASH

11118212135 = 26 - 2 + 6 = 8

ஆக, வாசகர்கள் – பெயரில் எண் 8 எந்த ரூபத்தில் வந்தாலும் தவிற்கும்படி கேட்டுகொள்கிறேன்.

பொதுவாக –

என் ஆராய்ச்சியில் கீழ்க்ண்ட ரிசல்ட் தான் – முடிவாக கிடைத்துள்ளது.

விபத்து / தீயினால் ஆபத்து / கோரமான மரணம் / மேஜர் ஆப்பிரேஷன் / நஷ்டம் அடைதல் / சொத்துக்களை இழத்தல்.



இப்படி பாதிக்கப்பட்டவர்களின் பெயரை ஆராய்ந்தால் 8 அல்லது 9 வருகிறது

(சமீபத்தில் விமான விபத்தில் மரணம் அடைந்த நடிகை)

SOWNDHARYA

3765451211 = 35 - 3+5 = 8

விபத்து நடந்த தேதி 17-4-2004

1+7 = 8

தீராத நோய்களை இது தருகிறது – வீட்டில் சண்டை சச்சரவு குடும்ப பிரச்சினைகளை இது ஏற்படுத்துகிறது.

தன்னம்பிக்கையே இல்லாதவர்களுக்கு - 9 நம்பரில் பெயரை மாற்றினால் ... திடீர் என்று அவர்களுக்கு வீரம் / வேகம் வருவதை காட்டுகிறது.

ஏற்கனவே – வேகம் உள்ளவர்களுக்கு 9ம் நம்பர் பெயரை வைத்தால் –

உடலில் மனதில் வேகம் அதிகமாகி, – விபத்து நோய்களில் முடிகிறது.

திருமணம் ஆகாதவர்கள் – திருமணமாகி விவாகரத்து ஆனவர்கள் - கணவன் மனைவி ஒற்றுமை இல்லாமல் இருப்பவர்கள் – இளம் வயதில் விதவை ஆனவர்கள்

பெயர்களை கவனித்தால் 1–7–8–2ல் வருவதை காணலாம்.

(8 நம்பர் எல்லா துரதிஷ்டங்களையும் தரும்)

2ம் நம்பர் உள்ளவர்கள் – நிலையற்ற வாழ்க்கையையும்

3ம் நம்பர் உள்ளவர்கள் – அனைத்தையும் இழந்து தியாகி போலும் வாழ்கிறார்கள்.

இதுபோல் – ஏகபட்ட ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு உள்ளது.

**வெற்றி பெற்றவர்கள்**

**புகழ் பெற்றவர்கள்.**

சகல வசதிகளை அனுபவித்து வாழ்பவர்கள்,

இப்படி – வெறித்தனமாக சேகரித்த விஷயங்களை வைத்து நிறைய பெயர் மாற்றம் செய்து கொடுத்து,

வெறும் பெயர் மாற்றத்திலேயே – பலருடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துள்ளேன். (பிறந்த தேதியும் ... இந்த எண்ணில் அமைந்தால் பெயர் மாற்றம் அவசியம்)

வாசகர்களின் நலனுக்காக –

கீழே ஆங்கில எழுத்தின் எண் மதிப்பை கொடுத்துள்ளேன் வீட்டில் உள்ளவர்கள் பெயரை ஆராய்ந்து பாருங்கள் தீய எண் பெயரில் வந்தால் முறைபடி மாற்றி கொள்ளுங்கள் (குறிப்பாக பெயர் மட்டுமே 8 வந்தாலும் – இன்ஷியலுடன் கூட்டி 8 வந்தாலும் மாற்றி விடுங்கள்)

## ஆங்கில எழுத்தின் எண் மதிப்புகள்

| ஆங்கில எழுத்தின் எண் மதிப்புகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | F | G |
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 |
| H | I | J | K | L | M | |
| 5 | 1 | 1 | 2 | 3 | 4 | |
| N | O | P | Q | R | | |
| 5 | 7 | 8 | 1 | 2 | | |
| S | T | U | V | | | |
| 3 | 4 | 6 | 6 | | | |
| W | X | Y | | | | |
| 6 | 5 | 1 | | | | |
| Z | | | | | | |
| 7 | | | | | | |

மேலே உள்ள எழுத்துகளின் எண் மதிப்பை உங்களுக்கு தெரிந்தவர்களின் பெயர்களில் எல்லாம் எழுதி பார்த்து, எண். 8 உள்ளவர்களின் பெயரை மாற்றி அமைக்க உதவுங்கள்.

பெயரை மாற்ற முடிவு செய்துவிட்டால் – முறைப்படி மாற்றுங்கள் நீங்களாகவே முழுவிவரம் தெரியாமல் மாற்றி கஷ்டபடவேண்டாமே!

மேலும் –

எதிர்காலம் பற்றி யூகித்த பிறகுதான் பெயர் மாற்றம் செய்ய வேண்டும்.

எதிர்காலம் தெரியாமல் – பெயர்மாற்றம் செய்யகூடாது.

ஜாதகத்தில் – விபத்துகள் எதுவும் நடக்காது என்ற சூழ்நிலை இருப்பின் 9ம் நம்பர் வாழ்க்கையில் வெற்றி அடைய உதவி புரியும்.

ஜாதகபடி, விபத்து சூழல், இருப்பவர்கள் 9ம் நம்பரில் பெயர் வைக்க கூடாது.

(பெரும்பாலும் விபத்துகள்ஏற்படும் வாகனம் நம்பர்களை கவனிக்கவும் 8–9 வரும்)

அடுத்து –

பிறந்த தேதி 8–17–26

அல்லது பிறந்த தேதி – மாதம் – வருடம் கூட்டினால் 8 வரும் தினங்களில் பிறந்தவர்கள் (1–3–2002) 1+ 3 + 2 + 0 + 0 + 2 = 8

இதே எண்ணில் ஆதிக்கத்தில் சிக்கி கொள்வாரக்ள் இவர்கள் அனைவரும் முறைபடி பெயர்மாற்றம் செய்வது நல்லது.

1–8–7–9– பிறந்த தேதிகளில் சம்பந்தப்பட்ட பெயர்களுக்கு, திருமண வாழ்க்கையில் பிரச்சிகைள் தீவிரமாக வருகிறது.

இவர்கள் முறைப்படி பெயர் மாற்றம் செய்து கொள்வது நல்லது.

இதில் 9ம் நம்பர் சம்பந்தபடுபவர்கள் வாழ்க்கை முழுவதும் ஒரே சண்டை சச்சரவு என்று போராடி கொண்டே இருக்கிறார்கள்.

ஆகையால் – வாசகர்கள் கொஞ்சம் யோசிக்கவும்

ஒரு நண்பர் கேட்டார் –

"**பத்திரகாளி**" படத்தில் நடித்த

ராணி சந்திரா – ஏன் விமான விபத்தில் இறந்தார்.

பெயரில் – ஏதாவது ரூபத்தில் 8 வரும்.

**எப்படி?**

RANICHANDRA

2 1 5 1 3 5 1 5 4 2 1 = 30

30 தானே வருகிறது?

ஆங்கில எழுத்தில் உள்ள உயிர் எழுத்தை பிரிக்கவும். (A.E.I.O.U)

R N C H D D R

2 5 3 5 5 4 2 = 26 – 2 + 6 = 8

உயிர் எழுத்தை பிரித்தால் – உடல் எழுத்து 8 வருவதை காட்டுகிறதா?

ஐயோ – இப்படி எல்லாம் வேறு பார்க்க வேண்டுமா? ஆளை விடுங்க சாமி என்று ஓடியே போய்விட்டார்?

# பரிகார பூஜையால் மகிழ்ச்சியான வாழ்க்கை!!

**சென்னையில் வேலையில்லாமல் ...**




சுற்றிகொண்டு, சாப்பிட்டிற்கே கஷ்டப்பட்டு, பட்டினியாக சோர்ந்து திரிந்த காலம்!

அப்பொழுது தான் – ஹரி சாரை பற்றி கேள்விப்பட்டு ... சந்தித்தேன்.

ஊரோடு போய்விடும் முடிவுக்கு வந்து இருந்தேன்.

என் ஜாதகத்தை பார்த்து விட்டு ... சென்னையிலேயே தங்கும்படி கூறி, உடனடியாக மிக நல்ல வேலை வாய்ப்பு – மிக உயர்ந்த இடத்தில் அமையும் என்று கூறி, முற்றிலும் இலவசமாக ஒரு பூஜை ஒன்றை செய்து கொடுத்தார்.

ஆச்சரியப்பட்டு போனேன், சில மாதங்களில் சூழ்நிலையே தலைகீழாக மாறியது.

சென்னையில் – அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் வேலை கிடைத்து, மாண்புமிகு தமிழகமுல்வர் அம்மா! கையால் சம்பளம் வாங்கும் பாக்கியம் பெற்றேன். இதன் மூலமாக ...
எல்லா எம்.எல்.ஏ., மினிஸ்டர்களுடனும் உயர்ந்த பதவியில் இருப்பவர்களுடனும் பழகுவதற்கு வாய்ப்பு அளித்த ஆவியுலக பெரியவர்களுக்கு என் சிரம் தாழ்த்தி வணக்கம் தெரிவிக்கிறேன்.

கண்ணதாசன் (ஊழியர்) அ.தி.மு.க.
தலைமை அலுவலகம், சென்னை – 14.

# நாகதோஷம் காரணமாக ...

# திருமண தடையா?



1997ம் வருட, கடைசியில் நான் ஹரி ஜோதிடரை சந்திக்கும் பொழுது எனக்க வயது 42.

நாகதோஷம் காரணமாக திருமண தடை ஏற்பட்டு, ஊரில் உள்ள எல்லா ஜோதிடர்களும், கோவில் குருக்களையும் பார்த்து, பார்த்து ... பரிகாரம் எல்லாம் செய்து, எதுவும் பலிக்காமல் – திருமணம் செய்யும், எண்ணத்தை கைவிட்டு பல வருடம் ஆகிய நிலையில் தான் (ஹரி) ஜோதிடரை சந்தித்தேன்.

எதிர்காலம் எப்படி அமையும்? என்று கேட்டேன் எல்லா ஜோதிடரும் சொல்வதை போலவே! நாகதோஷ பரிகாரம் செய்யவும் அடுத்த வருடமே திருமணம் நடக்கும் என்றார். 42 வயதிலா? ... என்று நம்பிக்கை இல்லாமல் நானும் – நாகதோஷபரிகாரம் காளஸ்திக்கு சென்று பல முறை செய்துவிட்டேன் என்று கூறினேன்.

இது – ஆவிகள் மூலம் செய்யப்படும் தோஷ நிவர்த்தி, மனிதர்களால் செய்யப்படும், பூஜையை விட விசேஷமானது என்றார்.
கொஞ்சம் நம்பிக்கை வரவே!
பூஜைக்கு ஒத்துக் கொண்டோம்.



பரிகாரங்கள் ஹரி சார் சொன்னது போல் செய்தோம். ரொம்பவும் ஆச்சரியம் (43 வயதில்) 6.5.1998ல் எனக்கு திருமணமாகியது. குடும்ப வாழ்க்கையும் நன்கு அமைந்தது.

4 வருடம் கழித்து, அக்டோபர் 2002ம் வருடம் ஹரி சாரை நேரில் சந்தித்து, இதை பற்றி எழுதி கொடுத்தோம்.

**M. Lalitha**
**No.27, (Old No.11) 6th Street,**
**Sowrastra Nagar, Choolaimedu, Chennai - 94.**

திரு. ஹரி அவர்கள் சொன்னது போல அவர் குறிப்பிட்ட காலகட்டத்தில் ஏசி மாருதி கார் வாங்கி இருக்கிறோம்... வசதிகள் கூட துவங்கிவிட்டது!




திரு. பார்த்தசாரதி

25சி, ராஜ அண்ணாமலை புரம்,

புரசைவாக்கம், சென்னை – 84.

# அற்புத ஆவியின் அருள் வாக்கு!

மதிப்பிற்குரிய திரு. ஹரி அவர்களின் ஜாதக பலன்கள் 100% மிக சரியாக உள்ளது.

இது போன்ற ஒரு திறமை மிக்க மனிதரை இக்கலியுகத்தில் காண்பது அரிது.

என் வாழ்க்கையில் நடந்த அனைத்து சம்பவங்களும் மிகவும் ஆச்சரியப்படும்படி மாதம், வருடம் வாரியாக சொல்லி பிரமிக்க வைத்து விட்டார்.

1996 - 1999ல் நான் வீடுகட்டிய - என் தந்தையார் இக்காலத்தில் இறந்து போனது பற்றியும்

29 இன்ச் கலர் டி.வி. வாங்கினதை கூட துல்லியமாக சொல்லிவிட்டார். இப்படி ஏகப்பட்ட விஷயங்கள். இது எப்படி? என்பதே புரியாத குழப்பமாக உள்ளது.

திரு. ஹரி அவர்கள் எல்லா நலன்களையும் அடைந்து, அவருடைய அறிவுரையும் வழிகாட்டுதலும் அனைவரையும் சென்றடைய வாழ்த்துகிறேன்.

அவருடைய அறிவுரையும், வழிகாட்டுதலும் அனைவரையும் சென்றடைய வாழ்த்துகிறேன்.

S. Kannan, M.A., M.Phil.,
Assistant Headmaster
VALLAI S.I. ALAKARSAMY CHETTIAR HIGHER SECONDARY SCHOOL
No.2-3, ADAM SAHIB STREET,
ROYAPURAM, CHENNAI - 13.



# நாஸ்திகமே! எப்படி இதெல்லாம்?

14 மார்ச் 2004ல் ஜாதகம் பார்க்க அப்பாயின்மென்ட் வாங்கி இருந்தோம். ஜாதக கட்டத்தை பார்த்து விட்டு ... முகத்தை சீரியசாக்கி கொண்டு, சமீபத்தில் உங்கள் வீட்டில் ஏதேனும் துக்க சம்பவம் நடந்ததா? என்று கேட்டார்.

இல்லையே என்றோம்.

அப்படியானால் ... ஒன்ற செய்யுங்கள் 24.4.2004க்கு அப்பாயின்மெண்ட்டை (தேதி) மாற்றி தருகிறேன்.

தற்சமயம் கிரக சூழல்கள் அபசகுணத்தை குறிக்கிறது. என்று கூறி ... அனுப்பிவிட்டார்.

23 மார்ச் 2004 என் தந்தையார் தீவிர வயிற்று வலியால் ... தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

சரியாக –

தந்தை இறந்து, ஒரு மாதம் கழித்து 24.4.2004ல் ... திரு. ஹரியை சந்தித்தோம்.

துக்க சம்பவத்தை முன் நிறுத்தி – எதிர்காலம் சொல்ல கூடாது என்றார். அதிர்ச்சியாக இருந்தது.

M.ரவிச்சந்திரன்
பழைய எண். 6, புதிய எண். 9, ஜவகர்லால் நேரு தெரு,
ராஜிவ் காந்தி நகர், நெசப்பாக்கம்,
கே.கே.நகர் (மேற்கு) சென்னை – 78.

# சாதகமான தீர்ப்பு!!



Animal Welfare Board of India, Chennai - 41. (மத்திய அரசில்) பணிபுரிந்து வந்த எனக்கு எவ்வித காரணமும் இன்றி ... சஸ்பெண்ட் (பதவி விலகல்) செய்யபட்டேன்.

பல விதத்திலும் முயற்சி செய்தும் ... பலன் இல்லை. வழக்கும் நீடித்து கொண்டே சென்றது.

நேராக – ஹரி சாரிடம் வந்தேன். அவர் சொன்னபடி சில பரிகாரங்கள் செய்தேன். ஆகஸ்ட் மாதம் வேலையில் சேர்ந்து விடுவீர்கள் என்றார்.

அதன்படியே! எதிர்பாராத படி 9-8-2001ல் கோர்ட் ஆர்டர் எனக்கு சாதகமாக வந்து மீண்டும் பணியில் சேர்ந்தேன்.

C.G.பாலகிருஷ்ணன்
25, ராகவன் காலனி, 2வது தெரு,
வடபழனி, சென்னை – 26.

1999ல் எனது மகள் கீதாவிற்கு சுயமுன்னேற்றம் ஏற்படுவதற்காக பரிகாரங்கள் செய்ய சொன்னார். ஏற்கனவே! பலருக்கு




இவர் பரிகாரங்கள் செய்து கொடுத்து, அவர்கள் அனைவரும் மிக நல்ல நிலையில் இருப்பதை பார்த்து விட்டு,

நாங்களும் சுயமுன்னேற்ற பரிகாரத்திற்கு ஒத்துக் கொண்டோம்.

**என்ன ஆச்சரியம்?**

3.12.1981ல் பிறந்த என் மகள் 22.10.2002ல் (21 வயதில்) லண்டன் பயணம் மேற்கொண்டாள்.

அங்கு படிக்கவும் செய்தாள். கம்பியூட்டர் துறையில் நல்ல வேலையும் கிடைத்து.

**மாதம் 1 லட்சத்திற்கு மேல்**
**சம்பாதிக்க துவங்கிவிட்டாள் ...**

லண்டனில் செட்டில் ஆகும் சூழலும் உருவாகிவிட்டது. இதற்காக ஹரி சாருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**P. Manimekalai C2, Anna Flats,**
**Thiruvanmiyur, Chennai - 41.**

# தற்கொலை தீர்வாகுமா?

தற்கொலை செய்து கொள்ள போகிறேன் என்று – விரக்தியில் புலம்பிய திரு.கே.வி.பாண்டியன் அவர்களுக்கு பிரார்த்தனை முறைகளை உபயோகபடுத்தி, சில விஷயங்களை ஆர்.பி.ஹறி செய்ததில் – ராஜ்கிரண் நடித்த மாணிக்கம் படத்திற்கு எதிர்பாராதபடி இயக்குநர் ஆனார். திரு.கே.வி.பாண்டியன்

# எதிர்காலத்தை மாற்றும் தீர்க்கதரிசனம்!



அமிதாபச்சன் கார்ப்ரேஷன் நிறுவனத்தில் மிக உயர்ந்த பொறுப்பில் இருக்கும் திரு.சுகுவிற்கும், சன் டிவி புகழ் பெப்சி உமாவின் சகோதரிக்கும் 19 மே 1997ல் திருமணம் செய்விக்க நிச்சயம் செய்யப்பட்டது.

திருமணம் நடக்க – சில தினங்களே உள்ள நிலையில் ...

ஆர்.பி.ஹறி கூறினார். இத்திருமணம் நடக்காது என்று!!

ஆச்சரியப்படும்படி விரும்பதகாத சில நிகழ்ச்சிகள் நடக்கவும் பெண்வீட்டார் திருமண ஏற்பாட்டை கைவிட்டனர்.

ஆர்.பி.ஹறி அவர்கள் கூறியபடியே பெப்சி உமாவின் சகோதரிக்கு வேறு இடத்தில் வரன் அமைந்து, திருமணம் நடந்தது.

# உளவு துறையிலிருந்து
# S.T.ராஜசேகரன் அவர்கள்

(சென்னை காவல் துறை, கமிஷனர் அலுவலகம்)



என் ஜாதகத்தை பார்த்து, கடந்த கால நிகழ்ச்சிகளை தேதி – மாதம் – வருடம் என்று மிக துல்லியகமாக கூறியதில் ... அசந்து போனேன். குறிப்பாக 1996 முதல் 1999 வரை நடந்த அனேக பிரமிக்கத்தக்க மாற்றங்களை சொன்திில் பிரமித்தேன்.

---


*திருவல்லிக்கேணி கெல்லட் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் கோடீஸ்வரர் ஆன அதிசயம்.*



(1984)ல் ஆர்.பி.ஹரி அவர்கள் – பள்ளியில் படித்து கொண்டிருந்த பொழுது ... (திருவல்லிக்கேணி, கெல்லட் உயர்நிலைப்பள்ளி) ஓவிய ஆசிரியரான திரு. முனிவேல் அவர்களின் கைரேகையை பார்த்த ... 40 வயதுக்கு மேல் ... உங்கள் எதிர்காலம் மிக மிக பிரகாசமாக இருக்கும். கார், பங்களா வசதியுடன் வாழ்வீர்கள் என்று பலன் கூறினார்.

இன்று – அந்த ஆசிரியர் திருவல்லிக்கேணியில் 60 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள சொந்த வீடு, மாருதிகார் ... என்று மிக வசதியான சூழலுக்கு உயர்ந்து விட்டார.
திரு. முனிவேல் 9, லாலா ஹனுமந்து தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 5.

# தலையெழுத்து விதி மாறி விட்டது



1998ல் மிகவும் கஷ்டான சூழ்நிலையில் திரு. ஆர்.பி.ஹரி சாரை சந்தித்தோம். 100 ரூபாய்க்கு வழியில்லாத சூழ்நிலை.

ஹரி சாருக்கு ஜாதகம் பார்க்க கட்டணம் கொடுப்பதற்கு கூட வழியில்லாத நிலை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்

ஹரி சார் மட்டுமே சொன்னார் 2000 ஆண்டு முதல் மிக பெரிய அளவிற்கு முன்னேறுவீர்கள் சொந்த வீடு எல்லாம் வாங்குவீர்கள் என்று ...

சிட்டியில் உள்ள பெரிய பெரிய ஜோசியர் எல்லாம் பார்த்தோம்.

கேது தசையில் – முடிந்தது கதை! என்பது போலவே! பலன் கூறினார்கள்.

ஏற்கனவே ஆதாரங்கள் மூலம் தெரிந்து கொண்டதால்,

அவர் வாக்கை தெய்வ வாக்கு போல் நம்பினோம். பிறகு என்ன?

எங்கள் குடும்பமே ஆச்சரியப்படும் அளவிற்கு, 2000 முதல் எங்கள் தொழில் திடீர் வளர்ச்சி அடைந்தது. அனைவரும் பிரமிக்கும் படி சகல வசதிகளும் கூடியது. 2003ம் வருடத்தில் 30 லட்சம் மதிப்புள்ள வீட்டை அடையார் ஏரியாவில் வாங்கினோம், என்றால் ... பார்த்து கொள்ளுங்கள்!

இவ்வளவு குறுகிய காலத்தில் வாழ்க்கையே மாறியது ... யாரும் எதிர்பாராத அதிசயமே

இளங்கேவன் 16, 4வது குறுக்கு தெரு, அடையார், சென்னை – 90.

# குழந்தை பாக்கியம் வேண்டுமா?

ராமசந்திரின்

சென்னை சென்ட்ரல் அருகே உள்ள ரிப்பன் பில்டிங்கில் (சென்னை) மாநகராட்சியில் கல்வித்துறையில் பணிபுரிகிறார்.

இவருக்கு திருமணமாகி 8 வருடமாக குழந்தை இல்லாமல் இருந்தது.

ஹரி அவர்கள் மூலம் முறைபடி பரிகாரம் செய்தார்.

(குழந்தை பாக்கயத்திற்காக)


ஆச்சரியபடும்படி பரிகாரத்திற்கு பிறகு – ஹரி அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் குழந்தை பாக்கியம் ஏற்பட்டது.

இவருடைய வீட்டு விலாசம் (வாடகை வீடு மாறகூடிய சூழலில் இருந்ததால்) வெளியிடப்படவில்லை.


# தகடுகள் யந்திரங்கள் ... வாழ்க்கையை பாதிக்குமா?

கோடுகள் ... மிக சாதாரணமாக எடுத்து கொள்ள கூடிய விஷயமாகிலும், உள் அர்த்தம், ரகஸ்ய குறியிடுகள், மர்மமான விஷயங்கள் அடங்கியதாகும்.

கோடுகளில் கூட ஆண் கோடுகள், பெண் கோடுகள் உண்டு.




ஆண் கோடுகள்



ஆண் கோடுகள் மூலம் டிசைன்

## ஆண்கோடுகள்

முரட்டுதனமாக, கட்டம் கட்டமாக நளினமற்ற முறையில் காணப்படும்.



ஆண்களின் சோப்

ஆண்களின் சட்டைகளில் இந்த மாதிரி கோடு அமைப்புகள் காணப்படும்.


ஆண்களின் சோப் – லைஃபாய் எவ்வளவு முரட்டுதனமாக உள்ளது?

அதன் டிசைன் அமைப்பு ... கவனிக்கவும்

## பெண் கோடுகள்



பெண் கோடுகள் மூலம் டிசைன்




பெண் கோடுகள்

நளினமாகவும் – வளைந்து நெளிந்து குழைந்து உள்ளதை கவனிக்கவும்.



பெண்கள் உபயோகப்படுத்தும் பொருள்களில் இந்த டிசைன் அமைப்புகளே காணப்படும்.

அதே போல் பெருமளவு உணர்ச்சியை தூண்டும் கோடுகள் பல உண்டு.



மனதில் பெரும் மாற்றங்களை கொண்டு வரும் சக்தி – கோடுகளுக்கு உண்டு.



ஸ்வஸ்திக் சின்னம்
வடநாடுகளில்
பிரபலமான சின்னம்

இதையே ஹிட்லர்





ஸ்வஸ்திக் சின்னத்தை தலைகீழாக மாற்றி போட்டு – தனது குறியீடாக பயன்படுத்தியதில்.

உலகில் பேரழிவை சந்தித்தது. யூதர்கள் கொன்று குவிக்கபட்டார்கள். உலக போருக்கு இந்த சின்னம் தூண்டுதலாக இருந்தது.


உலக வரைபடத்தின் கோடுகள் – கொஞ்சம் மாறினாலும் பயங்கர அழிவுகள் ஏற்படும்.

அணு ஆயுதங்கள் வெடிக்கும்.

ஆம்.

கோடுகளுக்கு அவ்வளவு சக்தி உண்டு.

ஒலி அதிர்வுகள், ஒளி அதிர்வுகளை கணக்கிட கோடுகள் தான் உபயோகப்படுத்த படுகின்றது.



இதய துடிப்பை – ஈ.ஸி.ஜி. மூலம் அளவிட ...
கோடுகள் தான் வழிகாட்டுகிறது.

அந்த கோடுகளில் – கொஞ்சம் பிசகு காணபடினும்...

உயிருக்கு உத்திர வாதம் இல்லாமல் போகும்.

முன்னோர்கள் ...

அதிர்ஷ்ட கோடுகள்,
துரதிர்ஷ்ட கோடுகள்,
அதிர்ஷ்ட வடிவங்கள்,

துரதிர்ஷ்ட வடிவங்கள் என்றும், தெய்வாம்சம் பொருந்திய வடிவங்கள் என்று பலவற்றை பிரித்து வைத்துள்ளனர்.

நம் நிழலின் கோடுகள் கூட நம் எதிர்காலத்தை உணர்த்தும். மரணத்தையும் காட்டும் என்று சொல்லி இருக்கிறார்கள்.





வீடு அமைப்பின் – வரைபடம் கூட அதிர்ஷ்டத்துடன் சம்பந்தபட்டது தான் (வாஸ்து)

இசை தட்டுகளில் ... உள்ள மெல்லிய கீறலான



கோடுகளில் பாடல்களின் ஒ
வடிவம் பதிவாகி இருப்பது போ
...

யந்திரங்கள் தகடுகளில் ... மந்தி
ஒலி அதிர்வுகள் பதிவா
இருக்கும் என்பது ... முன்னோர்கள் கருத்து, இசை தட்டுக
கண்டு பிடிப்பதற்கு முன்பு இருந்தே ... இந்த நம்பிக்
முன்னோர்களுக்கு உண்டு.

ஒவ்வொருத்தர் ஜாதகம் பார்த்த பிறகு, பல நல்ல பலன்க
பலிதமாக ... ஆவிகள் அவரவர் மனநிலை, ஜாத
அமைப்பிற்கு ஏற்றபடி – ஆவிகள் மூலமே தகடுகள் எழு
சோதித்து பார்த்து உள்ளேன்.

வியக்கதக்க பலன்கள் கிடைத்து உள்ளது.

ஜாதக பலன் பார்ப்பவர்களுக்கு, தனிபட்ட நம்பிக்கையி
அடிப்படையில் மட்டுமே இதை செய்து தருகிறேன்.

ஆம்!

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு அதிர்ஷ்ட கோடுகள் உண்டு.

அந்த கோடுகளின் அடிப்படையில் வியாபார சின்னங்க
அமைத்து கொண்டால் பெரும் வெற்றி ஏற்படும் என்ப
விதி.

இதில் –

நாம் போடும் கையெழுத்தின் கோடுகளும் அடங்கும்.

அவரவரின் கையெழுத்து அமைப்பையும் கொஞ்சம் மாற்
கொள்வது நல்லது தானே!

# நமக்கும் மேலே – ஏதோ ஒன்று இருக்கிறது

18.2.2004ல் ஹரி சாரிடம் ஜாதகம் பார்க்க அப்பாயிண்ட்மெண்ட் (15 நாள் முன்பு) வாங்கி இருந்தோம்.

ரொம்ப ஆவலாக – போய் பார்த்தால்.

குடும்பத்தில் ஒருவர் மரணம் அடைய போகிறார் மரணத்தை முன் நிறுத்தி, எதிர்காலம் பார்க்க வேண்டாம்.

6.3.2004க்கு – அப்பாயிண்ட்மெண்ட் மாற்றி தருகிறேன் என்று கூறி, மேலும் 18 நாள் தள்ளி போட்டு விட்டார்.

ஒரே கலவரமாகி போனோம். 2 நாள் கழித்து 21.02.2004ல் –

என் சகோதரி 'நாகமணி' எதிர்பாராதவகையில் இறந்து போனதும் அதிர்ச்சியில் உறைந்து போனோம்.

**K. Balaji, No. 14, Ramnagar 4th Street, Triplicane, Chennai - 5.**

# ஆசிர்வதிக்கபட்ட வார்த்தைகளும் – அதிசய பலன்களும்

கர்ப்பை சுருங்கியுள்ள காரணத்தால் – என் மகள் 18 வயதாகியும் பெரியவள் ஆகாமல் இருக்கும் சூழல் ஏற்பட்டது. இதனால் என் மகளின் எதிர்காலமே பாழாவிடுமோ என்று பயந்து கண்ணீருடன் காலம் கழித்தேன்.

என் மகளை பார்க்கும் பொழுது எல்லாம் ஒரே வேதனையாக இருந்தது. மருந்து மாத்திரைகள் எதுவும் வேலை செய்யவில்லை.

ஹரி சாரிடம் – இதற்கான பரிகாரம் செய்யும்படி வேண்டினேன்.

அவரும் பூஜைகள் செய்து, பிரசாதம் கொடுத்தார். 2003ல் உங்கள் மகள் பெரியவள் ஆவாள் என்று ஆவிகள் ஆசிர்வாதம் செய்ததாக கூறினார். ஆச்சரியப்படும்படி ஜனவரி 2003ல் என் மகள் பெரியவள் ஆனாள்.

# கமாண்டோ வீரரின் - ஜோதிட அனுபவம்



இந்தியாவில் ராணுவம், ரகஸ்ய புலனாய்வு, மிக மிக பெரிய வி.ஐ.பி.களுக்கு செக்யூரிட்டி என்று ... கலக்கியவருக்கு அவருடைய ஜாகபலன்கள் மிக துல்லியமாக வந்ததில் வாயடைந்து போனார்.

அவர் சொல்கிறார் ...

எனக்கு பிறந்த நேரம் துல்லியமாக தெரியாது, ஆனால் ... பிறந்த நேரத்தை துல்லியமாக கண்டுபிடித்த பிறகு,

அதை சரிபார்க்க ...

கடந்த கால சம்பவங்களை மாதம், வருடம் வாரியாக தெளிவாக கூறினார்.

குறிப்பாக –

15.08.2000 முதல் 21.6.2003க்குள் வீடு கட்டியதும்.

1998 முதல் 2000ல் மிக மிக உயர்ந்த பதவியில் இருந்ததையும்.

இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ... தீகாயம் அடைந்து, ஆஸ்பத்தியில் படுத்த காலமும் ...

இப்படி எலலாமே எப்படி? அவ்வளவு துல்லியமாக கூறமுடிந்தது என்று ரொம்பவும் ஆச்சரியமாக உள்ளது.

**பாதுகாப்பு கருதி பெயர் வெளியிட வேண்டாம்**
**என்று கேட்டுக்கொண்டார்.**

**Plot 18, 19th Cross Street, Kumaa Guru Avenue,**
**Nelamkarai, Chennai - 600 041.**

# விஜய் T.V.-Executive Finance S. Latha

3.2.2004

இன்று நாள் மிகுந்த மனக்குழப்பத்தோடும், வேதனைகளோடும் திரு. ஆர்.பி.ஹரி அவர்களை சந்தித்தேன். அவர் முதன் முதலில் என் வாழ்வில் நடந்த ஒரு சம்பவமான என் பெற்றோர் வீடு கட்டிய தேதி வருடம் தெரிவித்ததும்

ஆச்சரியத்தில் மூழ்கினேன், பிறகு.

என் தந்தையின் மரணம் வருடத்தோடு தெரிவித்தது. பின் என் மணவாழ்க்கை மற்றும், என் சொநத விஷயங்கள், சிலவற்றை கூறியதும் எனக்கு மிகவும் வியப்பளித்தது.

யாருமே இந்த அளவுக்கு கூறியதில்லை.

அவர் செய்யச் சொன்ன பரிகாரங்களை செய்து நிச்சயம் என் வாழ்வில் மேலும், மேலும் முன்னேறுவேன் என்று பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

நான் கம்ப்யூட்டர் கற்றுக்கொண்ட விபரங்களை (வருடத்துடன்) மற்றும் என் வாழ்வில் முன்னேற்றமான காலமான, வசதி வாய்ப்பு கூடி நான் சொந்தமாக வீடு வாங்கியது பற்றியும் அவர் கூறியது ... நான் நிச்சயமாக எதிர்பார்க்காத ஒன்று.

இந்த அளவு துல்லியாக யாரும் கணித்துக் கூறியதில்லை.


நான் மிகவும் ஆச்சரியபட்டும் போனேன். என் போல மற்றும் பலரும் இவரை சந்தித்து, தங்கள் பிரச்சினைகளில் இருந்து விடுபட வேண்டும் என்று மனமாரகேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு

**எஸ். லதா**

6/12 IV Street, Samudaria Colony,
Kolathur, Chennai - 99.

# டாக்டர்கள் கவனிக்கவும்!



21.1.2003ல்

என் மகன் எஸ். கே. சீனிவாசன் ஜாதகத்தை ஹரி சாரிடம் காண்பித்தோம்.

நாங்க யார் என்பதையும் எதற்கு வந்தோம் என்பதையும் காட்டி கொள்ளாமல் ...

வெறும் ஜாதக கட்டத்தை மட்டுமே காட்டினோம்.

ஜுன் 2002ல்

என் மகனுக்கு விபத்து நடந்த விஷயத்தை கூறி, ஆச்சரியதப்படவைத்தார்,

அது மட்டுமல்லாமல் ...

ஜுலை 2002ல்

விபத்து காரணமாக ஏற்பட்ட பாதிப்பு காரணமாக ...

முதுகுதண்டு வடத்தில் மேஜர் ஆப்பிரேஷன் நடந்தது என்று கூறி, எங்கள் அனைவரையும் வாயடைத்து போகும்படி செய்தார். இது எப்படிங்க? மருத்துவவிஞ்ஞானம் இதற்கு என்ன பதில் சொல்ல போகிறது?

**N.S. Kandasamy,**
**Plot No. 1434/A 17th Main Road,**
**Anna Nagar (West), Chennai - 40.**

# விவாகரத்து ஆனவரா? வாழ்க்கை துணையை இழந்து விட்டீர்களா?



என் மகளுக்கு 19.8.1997ல் முதல் திருமணமாகி மணவாழ்க்கை பாதித்து, கோர்ட் கேஸ் என்று ஏகப்பட்ட செலவுகளுடன், பிரச்சனை நீண்டு கொண்டே வந்தது.

ஐந்து வருடமாச்சு!

மகளின் வயதும் கூடி கொண்டே வருகிறேது ...

எப்பொழுது என் மகளுக்கு இரண்டாம் திருமணம் செய்து வைப்போம் என்று ஒரே கவலையாக இருந்தது.

எதிர்பாராத விதமாக ஹரி சாரை பற்றி கேள்விப்பட்டோம்.

டிசம்பர் 2001ல் – அவரை சந்தித்தோம் சில பரிகார முறைகளை கடைபிடிக்க சொன்னார்.

ஆச்சரியப்படும்படி –

சூழ்நிலைகள் வேகமாக மாறியது.

ஒரு வரனும் வந்தது – வெள்ளிக்கிழமை விவாகரத்து கிடைத்தது என்றால் அடுத்த திங்கள்கிழமை ஏப்ரல் 2002ல் இரண்டாம் திருமணம் நடந்தது.

விவாகரத்து கிடைக்கவும் 2ம் திருமணம் உடனே நடக்கவும் ரொம்பவும் ஆச்சரியப்பட்டு போனோம்.

மூன்று மாதத்தில் பிரச்சனை தீர்ந்தது – நாங்கள் ஹரி சாருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

**வி.சரளா ,11, 4வது தெரு, சந்திரசேகர் நகர்,
மணலிசாலை, சென்னை – 118.**

# கைரேகை கலை ... எந்த அளவுக்கு உண்மை?


①



②



| உடல் பலம் சார்ந்த அமைப்பு (அகன்று, தடிமனாக இருக்கும்) | மனோபலம் சார்ந்த கை அமைப்பு (குறுகி, நீண்டு, மெலிந்து இருக்கும்) |
|---|---|
| 1. உடல் பலம் தேவைப்படும் தொழில்களில் ஈடுபடுவார்கள். மெக்கானிக், கட்டிடவேலை, போலீஸ், ராணுவம் மற்றும் பல. | 1. மனம், மூளை உழைப்பில் ஈடுபடுவார்கள், ஆர்டிஸ்ட், கம்பியூட்டர், நிர்வாகம், செய்தல். |
| 2. முரட்டுதனமானவர்கள் கை கலப்பில் ஈடுபடுவார்கள் நேரடியாக மோதுவார்கள். | 2. அடிதடி, முரட்டுதனம் பிடிக்காது, கருத்து வேறுபாடுகளை காண்பிப்பார்கள் மறைமுகமாக மோதுவார்கள். |
| 3. உழைப்பவர்கள், உழைப்பிற்கு ஏற்ற பலனை அடைவார்கள். | 3. உழைப்பது வேறு, சம்பாதிப்பது வேறு என்று கருத்து உள்ளவர்கள். உழைப்பு குறைவு ... சம்பாதிப்பது அதிகம். |





**விரல் நுனிகள் அகலமாக உருண்டு திரண்டு இருப்பது**

1. கடின உழைப்பை நம்பி வெற்றி அடைவார்கள். சிலர் உழைத்து - கூலியை மட்டுமே நம்பி, வாழ்க்கையை தொலைப்பது உண்டு.

2. உள் மன ஆற்றல் குறைவு.

3. உடல் பலத்தால் எதையும் சாதிப்பார்கள் (ஒரு எல்லைக்கு உட்பட்டு).

4. கண்ணால் காண்பதை மட்டுமே நம்புவார்கள். கற்பனை செய்வது குறைவு.

**விரல் நுனிகள் கூர்மையாக முடிவது**

1. இவர்களுக்கு அதிர்ஷ்டத்தை பொருத்து வாழ்க்கை அமையும். சிலர் சோம்பலாகவே இருந்து, அதிர்ஷ்டம் வரும் என்று நம்பி நம்பியே வாழ்க்கையை தொலைப்பார்கள்.

2. உள்மன ஆற்றம் அதிகம்.

3. மன உறுதியால் எதையும் சாதிப்பார்கள் (இதற்கு எல்லையே இல்லை)

4. அதிகம் கனவு காண்பார்கள். எதிர்காலம் பற்றி கனவு காணுங்கள் என்று ... நமது ஜனாதிபதி அப்துல் கலாம் சொன்னது இவர்களுக்கு பொருந்தும். கற்பனை செய்தபடி வாழ - அதிகம் வாய்ப்புண்டு.

5. ஜோதிடம், பரிகாரம போன்றவற்றை நம்ப மாட்டார்கள். (இவர்களுக்கு ஆதாரங்கள் தேவை).

6. பரிகார விஷயங்களில் மனோரீதயாக ஒத்துழைப்பு தருவதில்லை ... பணம் கொடுத்தால் காரியம் ஆகுமா? என்று கேட்டார்கள்.

7. இவர்களுடைய வெற்றி உழைப்பால் வந்ததாகும்.

5. தத்துவம், வேதாந்தம், ஜோதிடம் ஆன்மிக விஷயங்களில் ஆர்வம் கார்டுவார்கள்.

6. உள் மனவசியம் – ஆவிகள் மூலம் செய்யப்படும் பரிகாரங்கள், ஹிப்னாடிக் சிகிச்சை, தியானங்கள் ... இவர்களுக்க மிக நல்ல பலனை தருகிறது.

7. இவர்களுடைய வெற்றி அதிர்ஷ்டத்துடன் (மனோசக்தி + கற்பனா சக்தி கலந்து வந்ததாகும்.

மேற்குறிய கை வகைகளில் – நீங்கள் எந்த வகை கை சார்ந்து உள்ளீர்கள்? குறிப்பாக கட்டை விரலையும் கவனிக்கவும். நீங்கள் 2ம் வகை சார்ந்த கை அமைப்பு உள்ளவரா? உங்களுக்கு ஆவிகள் மூலம் செய்யப்படும பரிகாரங்கள் 100% பலிதமாகும்.



# முன்னாள் இந்திய ஜனாதிபதி திரு. கிரி அவர்களின் மகன் மாலிக் கிரி அவர்களின் கருத்து.



வி.வி.கிரி
முன்னாள் இந்திய
ஜனாதிபதி

**Mr.R.P. Hari has given a very correct picture of my past from my birth and generally he has given very accurate reading.**

**He has also predicted very good time for me from 11.9.2004.**

**If his happens I shall again goto Mr. Hari to congratulate him.**

**V. Mallick Giri**
**S/o. V.V. Giri (14.5.2004)**

# சுயமுன்னேற்றம்

நான் அக்கோடபர் 2002ல் சுயமுன்னேற்றததிற்கான பூஜை ஆரம்பித்து மார்ச் 2003ல் புதிய தனி சொந்த வீடு ஒன்று வாங்கியுள்ளேன் இது எதிர்பாரத விதமாக நடந்தது.

**C. DEVARAJ**
No. 1/8, 18th Street, Muthamizh Nagar, Chennai - 600 118.

# சொந்த வீடு... வேண்டுமோ?



வீட்டை கட்டி பார் – கல்யாணம் செய்து பார்

என்பது பழமொழி. இந்த இரண்டு விஷயத்தில் உலக அனுபவம் யாவும் ஏற்பட்டு விடும். அந்த அளவுக்கு கடினமான ஒன்று.

முதலில் –

சொந்த வீடு கட்டி கொள்ளவது, பிறகு தன் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைப்பது. இரண்டுமே அதிக பொறுப்புள்ள காரியம் தான்.

அவரவர் திருமணத்தை பற்றி – இந்த பழமொழி பேசவில்லை அது ரொம்ப சுலபமான விஷயம். மற்றவர்களின் திருமணத்தை தலைமை தாங்கி, செலவு செய்து நடத்தி வைப்பது தான்மிக பெரிய விஷயமே! (பெற்றவர்களுக்கு தான் அதிக கஷ்டம்)

வீடு கட்டுவது பற்றி பார்த்தால் ... உலகத்தில் ஜனதொகை பெருகி கொண்ட வருகிறது – பின் வரும் சந்ததியினருக்கு இருக்க, வசிக்க வீடு வேண்டாமா?

எல்லாம் வல்ல மகா சக்தி – மிக குறைந்தபட்ச மக்களை தேர்ந்தெடுத்து, வீடுகளை கட்டும் வாய்ப்புகளை அளித்தால் ... பின் வரும் மக்கள்தொகை வீடுகள் இன்றி நடு தெருவில்தான் நிற்க வேண்டிவரும்.

ஆக!

இயற்கை சக்தியானது.

வீடுகளை கட்ட குறைந்தபட்ச மக்களை தேர்ந்தெடுக்கவில்லை.

அதிகபட்ச மக்களை தேர்ந்தெடுக்கிறது.

அப்படி பார்க்கையில் 80% மக்கள் – சொந்த வீடு கட்டும் பாக்கியம் அடைகிறார்கள். குறைந்தபட்சம் வீடு கட்ட நிலத்தையாவது வாங்கி விடுவார்கள்

மீதம் உள்ள 20% மக்கள் மட்டுமே ஊக்கமின்றி, சோம்பேறியாக காலம்கடத்தி, குடித்துவிட்ட, லட்சியங்களை மறந்து ... கடைசி வரை அடுத்தவர் வீடுககளில், குடி இருந்து, வாடகை வீடுகளிலும், பிளாட்பாரங்களில் வாழ்ந்து, மற்றவர்களை சார்ந்து வாழ்ந்து, மடிகிறார்கள். (ஆனாலும் – வீடு கட்டும் கடமையை இவர்களின் வாரிசுகள் 100% நிறைவேற்றுகிறார்கள்) சில புண்ணியவான்கள் – பெற்றோர்கள் கட்டி வைத்த வீட்டில் சொகுசாக வாழ்ந்து மடிவதும் உண்டு.

இங்கு – ஒன்று கவனிக்கப்பட வேண்டும்.

நாம் சொந்த வீடு கட்டும் வரை ... வாடகை வீடுகளில் வாழ்வதும். ஒரு குற்றமே அல்ல. துரதிஷ்டமும் அல்ல!

இன்றைய சொந்த வீட்டுகாரர்கள் 80% சதவிகிதத்தினர் வாடகை வீடுகளில் குடி இருந்த அனுபவம் உள்ளவர்களே!

நாம் கட்டும் வீடுகளில் வாழ போவது கொஞ்ச காலமே மற்றவர்கள் வாழ போவது தான் அதிக காலம்.

வீடு கட்டும் பொழுது நமக்காக கட்டுவது போல் தோன்றுவது – ஒரு மாயை!

இயற்கையின் நோக்கம் அதுவல்ல!



பின் வரும் மக்கள் கூட்டத்திற்கு, ஒருவர் ஒரு வீடு கட்டுவதே – போதாது.

மக்கள் தொகையின் பெருக்கத்தின் அடிப்படையில் நிறைய வீடுகள் தேவைப்படுகிறது.

வீடு கட்டுவதன் – நோக்கம் சுயநலத்துடன் இல்லாமல் கொஞ்சம் பரந்த மனதோடு சிந்தனை செய்து பாருங்கள்.

இறைவா–!

என் பின் வரும் சந்ததியினருக்கு என் மூலமாக இரண்டு, மூன்று வீடுகளாவது கட்டி கொடுக்க எனக்கு வாய்ப்பு அளியுங்கள் என்று வேண்டி பாருங்கள்.

இயற்கை சக்தியும் ... வேலை சுலபமாகிவிட்டதே! என்று உங்களையும் தேர்ந்தெடுக்கும். பல வீடுகளுக்கு சொந்தகாரர் ஆகலாம்.

இதையே சுயநலத்துடன் சிந்தித்தால் ... கொஞ்சம் கஷ்டப்பட்டே சாதிக்க வேண்டிவரும். பொதுநலத்துடன் சுயநலம் இணைவது. இறைவனுடன் இணைவது போல் ஆகும்.

ஆக!

சொந்த வீடு பாக்கியம் எல்லோருக்குமே உண்டு ஆனால் வீடு அமையும் காலம் மட்டுமே ஒருவருக்கு ஒருவர் மாறுபடும்.

50 வயதில் – ஒருவர் வீடு கட்டுவதை பார்த்து, 30 வயதுக்காரர் பொறமைபடுவது கூட தவறுதான்.

பொறாமை நம்மை முடக்கிபோடும். உலகுக்கு அவரால் முடிந்ததை செய்கிறார் என்று தான் நினைக்க வேண்டும்.

வீடு கட்டும் பொழுது கட்டுங்கள்.

அது வரையில் ... வாடகை வீட்டில் நிம்மதியாக வாழ பழகுங்கள்.



சொந்த வீடு இல்லையே என்று ஏக்க பெருமூச்சுடன் ஜாதகம் பார்க்க வருபவர்களுக்கு ...

அவர்கள் வீடு வாங்கும் பாக்கியம் அடைவது எப்பொழுது என்று கூறி மிக பெரிய மனநிம்மதியை நான் கொடுத்து இருக்கிறேன்.

தற்சமயம் இருக்கும் சூழலை வைத்து, எதிர்காலம் பற்றி ஒரு கணக்கு வைத்திருப்பார்கள் பலர்.

அந்த கணக்கின் படி வாழ்க்கையை சுவரசியம் இல்லாமல் விதியே என்று தள்ளி கொண்டு போவர்கள்.

ஆனால் –

ஆவிகள் மூலம் எதிர்காலம் தெரிந்து கொண்ட பலர். வாழ்க்கையை புதிய கோணத்தில் பார்க்க துவங்கி ... அதிக தன்னம்பிக்கையுடன், உற்சாகத்துடன் எதிர்காலந்தை வரவேற்க தயாராகி விடுவதை பார்த்து இருக்கிறேன்.

ஆக

இவ்வுலகத்தில் எதிர்கால சந்ததியினர்களுக்கு வீடு கட்டி கொடுக்கும் பொறுப்பு உங்களுக்கும் உள்ளது. ஆகையால்,

வீடு கட்ட தயாராகுங்கள் (மனதளவில்) எப்பொழுது வீடு வாங்குவீர்கள், கட்டுவீர்கள் என்பதை ஆவிகள் மூலம் தெரிந்து கொள்ளுங்கள் வீடு கட்டும் விஷயத்தில் – தப்பித்து போய்விடலாம் என்று நினைக்காதீர்கள்.

நீங்கள் – 80%ல் ஒருவர். மகா சக்தி வீடு கட்ட உங்களையும் தேர்ந்தெடுத்து உள்ளது. நீங்கள் தப்பமுடியாது. ஆவிகளயின் வாக்குபடி சொந்த வீடு கட்டியவர்கள் பற்றி ஒருசில ஆதாரங்கள் கொடுத்துள்ளேன் கவனிக்கவும்.

# சொந்த வீடு அமைந்தது

1997 அக்டோபர் மாதம்.

திரு. ஹரி அவர்களிடத்தில் ஜாதகம் பார்க்க.

நானும் என் மனைவியும் வந்தோம். அவர் எங்கள் இரண்டு பேர்களின் ஜாதகத்தை கணித்து 2000 - 2002க்குள் நாங்கள் வீடு கட்டி குடி புகுவோம்.

குழந்தைகளால் குடும்பம் மேன்மை அடையும் என்று சொன்னார்.

அதன்படியே என்னுடைய மூத்த மகனுக்கு வெளிநாட்டில் மிக நல்ல வேலை கிடைத்தது.

இதனால் குடும்பம் மேன்மை அடைந்தது. குறிப்பிட்ட காலகட்டத்தில் சொந்த வீட்டுக்கு குடி புகுந்தோம்.

**எம்.ஏ. துரை, (முருகன் இல்லம்) எண்.6, துரைராஜ் தெரு, தேவராஜ் நகர், சாலிகிராமமம், சென்னை - 93.**

# சொந்த வீடு

என் கணவருக்கு, ஹரி சாரிடம் 1998ல் ஜாதகம் பார்த்தோம்.

2000ல் சொந்த வீடு கட்டுவீர்கள் என்று, பலன் கூறினார்.

ஆச்சரியபடும்படி குறிப்பிட்ட காலத்தில் சொந்த வீடு அமைந்தது.

35 வயது துவங்கும் போது - விபத்து ஏற்படும் என்று கூறியிருந்தார்.

35 வயது துவங்கி, அடுத்த் நான் (09-01-2004).

டூ விலரில் சென்ற பொழுது, தவறி வீழ்ந்து பலத்த காலயம் ஏற்பட்டது. முகத்தில் அதிகபட்சமாக அடிபட்டது.

அமுதா ராஜேந்திரன்
36/2, அண்ணா தெரு, காந்தி நகர்,ஷ
சாலிகிராமம், சென்னை - 93.

## பேசும் ஆவிகள் – மாத இதழ்! ஆசிரியர் விக்கிரவாண்டி ரவிசந்திரன் அவர்களுக்கு (1995ல் கூறப்பட்ட பலன்)

மேகதூதன் பதிப்பகம் – என்ற பெயரில் ஒரே மாதத்தில் புதிய பதிப்பகம் ஆரம்பிக்கப்படும் என்று ஆசிரியர் விக்கிவரவாண்டி ரவிச்சந்திரன் அவர்களுக்கு ஆர்.பி. ஹரி அவர்கள் பலன் கூறியது போல்,



சென்னை – 14, மாருதி பதிப்பகத்திற்காக – ஆவிகள் பற்றி ஆராய்ச்சி கட்டுரைகள் எழுதி வந்த ஆசிரியர் விக்கிரவாண்டி ரவிசந்திரன் அவர்கள் சொந்தமாக – ஒரே மாதத்தில் மேக தூதன் பதிப்பகம் உருவாகும் சூழல் ஏற்பட்டது.

# திருமண பரிகாரம்




5 வருடம் முன்பு, எனக்கு திருமணமாக வேண்டுமானால் சில பரிகாரம் செய்ய வேண்டும் என்று கூறினார். நாங்கள் இதை பெரிதுபடுத்தாமல் இருந்து விட்டோம். ஆனால் ... எவ்வளவு முயற்சி செய்தும், திருமணம் தடை ஏற்பட்டுக் கொண்டே வந்தது. கடைசியில் டிசம்பர் 1997ல் பரிகாரம் செய்தோம். பரிகாரம் முடிந்ததும் மே 1998ல் திருமணமாகும் என்று கூறினார். 17 மே 1998ல் திருமணமாகி விட்டது.

பரிகாரம் செய்த காரணத்தால் 100% வெளிநாட்டில் செட்டில் ஆவீர்கள் என்று கூறினார். இப்பொழுது நாங்கள் வெளிநாட்டில் உள்ளோம். கீழே உள்ள விலாசம் எங்கள் சொந்த வீடு விலாசம்.

**P.S.Manjula, No.58, Nirmal Street, Ram Nagar, Ambattur, Chennai-53.**

# எதிர்கால எச்சரிக்கையை சாதாரணமாக எடுத்து கொள்ளாதீர்கள்

5.2.2004ல்




ஸ்கூட்டரில் சென்ற பொழுது,

எதிரில் ... ஒரு ஆட்டோ படுவேகாக வந்து, என் ஸ்கூட்டரில் மோதி ...

விபத்து ஏற்பட்டது.

இதில் கால் முட்டியில் ... பலமாக அடிபட்டது.

வலி தாங்க முடியாத அளவிற்கு ரொம்பவும் அவஸ்தை பட்டேன்.

2001ல் ஹறி சாரிடம் ஜாதகம் பார்த்து இருந்தேன். விபத்து நடந்தது ஒரு வாரம் கழித்து, – ஏதோ ஒரு தூண்டுதல் காரணமாக, ...

ஹறி சார் எழுதி கொடுத்த ஜாதகத்தை தேடி பிடித்து தூசு தட்டி, ... பக்கங்ககை புரட்டினால்

மேற்குறிப்பிட்ட காலகட்டதத்தில்.

காலில் முட்டியில் எலும்பு முறிவு (பாதிப்பு) என்று எழுதி இருந்ததை பார்த்ததும் – அதிர்ச்சியில் உறைந்து போனேன்.

ஹறி சாரை அறிமுகபடுத்திய திரு.ராம்தாஸை சந்தித்து, புத்தகத்தை காட்டி விவரம் சொன்னேன் ரொம்பவும் சந்தோஷபட்டார் (?) நிலமை ... அப்படி, எனக்கு அடிபட்டதை விட திரு. ஹறி .... சொன்னது பலித்தலில் மனிதருக்கு ஏக குஷி ...

**தூயமணி**
**எண். 7, மங்களாபுரம் முதல் தெரு, சேத்துபட்டு,**
**சென்னை – 31.**

# "கோலிவுட் டைரி"
## நிகழ்ச்சி தொகுப்பாளரின் ஓர் அனுபவம் !!



ஜெயா டி.வி.யில் - கோலிவுட் டைரியில் நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்த பொழுது, ஹரி சார் பற்றி கேள்விபட்டேன்.

செப்டம்பர் 2001ல் எனக்கு திருமணம் நிச்சயமாகி இருந்தது.

ஹரி சார் சொன்னார்.

2001ல் உங்கள் திருமணம் 100% நடக்காது.

2002ல் பிப்ரவரி மாதம் தான் உங்கள் திருணம் நடக்கும் என்று கூறினார்.

மணமகனோ வெளிநாட்டில் இருந்து செப்டம்பர் 2001ல் வருவதற்கு ஏற்பட்டு ஆகியிருந்தது. ஆனால் எங்கையுமே சத்திரம் கிடைக்காமல் நொந்து போய் ஹரி சார் சொன்னது போல்.

1.2.2002ல் என் திருமணம் நடந்தது, ரொம்பவும் ஆச்சரியம், அடுத்து ஹரி சார் சொன்னது போல் - இப்பொழுது தான் லண்டனில் செட்டில் ஆகிவிட்டேன்.

**R.Sridevi, 29-St. James Court,**
**Beckett Street, Leeds, Ls-9, 7TF, U.K.**

# மருத்துவத்தில் - ஆவிகளின் பங்கு?!



1999ல் பிறந்த என் பேரன் ஆபிஜித்ற்கு கிட்னியில் கோளாறு ஏற்பட்டு, விஷயம் சீரியஸ் ஆகியது. மூத்திரம் தன் முயற்சியில்லாமல் ... ஒழுகியது.

கிட்னியில் ஒரு உருண்டையாக கட்டி, அடைத்து இருப்பதாக ... ஏதோ கூறினார்கள்.

மருத்துவ சிகிச்சையில் சரியாக ... பலன் கிடைக்கல!

ஆளாளுக்கு ... ஏதோ ஏதோ சொன்னார்கள்.

நான் நேராக ஹரி சாரை சந்தித்தேன். ஜாதகத்தை பார்த்து ... அவரே இந்த வியாதியை பற்றி குறிப்பிட்டு, பரிகாரம் செய்ய சொன்னார்.

மேலும், டாக்டர்கள் செய்யும் சிகிச்சை முறையை தொடர்ந்து கடைபிடிக்கவும். மெடிக்கல் சம்பந்தபட்ட விஷயத்தில் நான் தலையிட விரும்பல ... என்று கூறி, பரிகாரம் செய்ய துவங்கினார்...

குடும்பமே ஆச்சரியபடும்படி - அவர் குறிப்பிட்ட தேதி வாரியாக... குணமடைய துவங்கி ... தற்சமயம் பூரணமாக குணமடைந்து விட்டான் (டாக்டர்கள் குறிப்பிட்ட ஆப்பிரேஷன் இல்லாமல்) ஸ்கேன் எடுத்து பார்த்தோம் ... குறிப்பிட்ட கட்டி மாயமாகவே மறைந்துவிட்டது.

இந்த சம்பவத்திற்கு பிறகு, எனக்கு தெரிந்த டாக்டர் ஒருவரை அவருடைய பிரச்சினைக்காக ஹரி சாரிடம் அறிமுகபடுத்தினேன். அவரும் - ஹரி சார் மூலம் பலன் அடைந்தார்.

இப்பொழுது - அந்த டாக்டர் மிக பெரிய அளவிற்கு வசதிகளை அடைந்து விட்டார். நான் - அவருடைய கிளினிக்கு சென்றால் எல்லா நோயாளிகளையும் விட்டு விட்டு, என்னிடம் ஓடி வந்து மரியாதை கொடுத்து என்னை கூட்டி செல்வது ... பெருமைகாய இருக்கிறது.

எல்லாம் ஹரி சாரை அறிமுக படுத்தியதினால் கிடைக்கும் மரியாதை என்பது ... எனக்கு புரியாமலம் இல்லை. எது எப்படியோ - என் பேரன் காப்பாற்றபட்டுவிட்டான். அது போதும் எனக்கு.

**ஸ்ரீதேவி,** பழைய எண். 18, புதிய எண்.17, என்.ஜி.ஓ. காலனி,
4வது கிராஸ் தெரு, சூளைமேடு, அருகில் டி.ஏ.வி. பள்ளி, சென்னை - 94.



# வளர்ப்பு பிராணிகளின் - ஆத்மாவும் உங்களுக்கு உதவும்

ஒவ்வொரு மனிதனின் உள்ளே - ஒரு ஆத்மா இருப்பது போல், மிருகத்தின் உள்ளேயும் ஒரு ஆத்மா செயல்பட்டு வருகிறது. உதாரணம் - நன்றியுள்ள நாய்களின் நடவடிக்கையை கூர்ந்து கவனித்தால் புரியும்.

எஜமானை காப்பாற்றவும், அவரின் குடும்பத்தை காப்பாற்றவும் நாய்கள் தன் உயிரையும கொடுக்கும், வர கூடிய ஆபத்துகளை முன்கூட்டியே தெரிவிக்கம்.

பூகம்பம் வரும் முன், வீட்டில் உள்ளவர்களை அவர்களது நாய் தொந்தரவு செய்து வெளியே இழுத்து வந்ததால் ஒரு குடும்பமே உயிர் தப்பய சம்பவம் கூட நடந்துள்ளது.

நாய் இறந்த பிறகும், துஷ்ட ஆவிகள் வீட்டில் நுழையாதவாறு செயல்படுவதை உணர்ந்தும் இருக்கிறோம்.

இப்படி எவ்விதபிரதிபலனும் இல்லாமல் –

காவல் காக்கும் நாய்கள் தகுந்த உணவு இன்றி, தெம்பு இன்றி ... மருத்துவ உதவி இன்றி வாழும் பரிதாப நிலை மாறவேண்டும்.

பாவ புண்ணியங்களை பற்றி உணர்ந்த நீங்கள் – உங்கள் தெருவில் ஆதரவற்ற நிலையில் உள்ள நாய்கள், பூனைகளுக்கு, ஒரு வேளையாகிலும் உணவு கொடுங்கள் இறைவனின் பார்வை உங்கள் மீது படும்.

எதிர்காலத்தில் பிராகசமாக விளங்ககூடிய நீங்கள் கோயிலுக்கு போய் சாமி கும்பிடுவதின் கூடவே, தெருவில் உள்ள ஆதரவற்ற நாய்கள், பூனைகளுக்கு கொஞ்சம் உணவு கொடுங்கள் ...

நீங்கள் செய்த பல பாவங்களை இது கழுவிவிடும்.

ஈரம் உள்ள உங்கள் இதயத்தில் – ஈஸ்வரன் குடியிருப்பான்.

நன்கொடை செய்பவர்கள் – போதிய நன்கொடை இன்றி தடுமாறும் பிராணிகளை பாதுகாக்கும் "Blue Cross of India" & "P.F.A."போன்ற தொண்டு நிறுவனங்களுக்கு தாராளமக பண உதவி செய்யலாம்.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

**"Blue Cross of India" No.1, Eldams Road, Chennai - 600 018.**
**People for animate A/4, Maharani bagh,**
**New Dehli - 110065**

இக்கட்டுரையாளர் திரு. எம்.ஆர்.ஜி. ராஜேஸ்வரி அவர்கள் வளர்ப்பு பிராணிகளின் மீது, மிகுந்த, பற்றும், பாசமும் உடையவர் அவைகளை பாதுகாத்து நலமுடன் வாழவைப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். பொதிகை சேனலில் நிகழ்ச்சி தொகுப்பாளராக பணிபுரியும் இவரின் வேண்டுகோளுக்கு இணங்க இக்கட்டுரை மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது.